உ

முருகன் துணை

ஸ்ரீ பாலசித்தர் பதமலர் போற்றி!

ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் திருவடி வாழ்க!

# 81 ஆம் ஆண்டு

# கல்லூரி ஆண்டு மலர்

# ANNUAL NEWSLETTER

## ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ், கலை, அறிவியல் கல்லூரி

மயிலம் - 604 304

**2018 - 2019**

உ

சிவமயம்

ஸ்ரீபாலசித்த குருவே நம

திருக்கயிலாய பரம்பரை மயிலம் பொம்மபுர ஆதீனம்
ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் திருமடம்
மயிலம் – 604304, விழுப்புரம் மாவட்டம்

# குருமரபு வாழ்த்து

**பரசிவமார் திருக்கயிலைப் பரம்பரையின்**
**வீரசைவ பரமே காட்டப்**
**பரனருளால் பொம்மபுரக் கடலுதித்த**
**சங்குகன்னப் பால சித்தர்**
**வரமயிலார் முருகனுப தேசமுடன்**
**வந்துகுரு வாகி யாண்ட**
**திரமிகுபேர் சிவஞான பாலயநற்**
**குருமரபு சிறந்து வாழி!**



மயிலம் - பொம்மபுர ஆதீனம் மயிலம் திருமடத்தில்
அமைந்துள்ள ஸ்ரீவள்ளி தெய்வானையர் உடனுறை
ஸ்ரீசுப்பிரமணிய சுவாமி



திருக்கயிலாய பரம்பரை மயிலம் - பொம்மபுர ஆதீனம்
பதினெட்டாம் பட்டம் குருமகா சந்நிதானங்கள்
ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்
கல்லூரி நிறுவனர்



திருக்கயிலாய பரம்பரை மயிலம் - பொம்மபுர ஆதீனம்
பத்தொன்பதாம் பட்டம் குருமகா சந்நிதானங்கள்
ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்
மேனாள் செயலர், மேனாள் முகமைத் தலைவர்



திருக்கயிலாய பரம்பரை மயிலம் - பொம்மபுர ஆதீனம்
இருபதாம் பட்டம் குருமகா சந்நிதானங்கள்
ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்
மேனாள் செயலர், முகமைத் தலைவர்

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| மயிலம் பொம்மபுர ஆதீனம்<br>ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்<br>20ஆம் பட்டம் குருமகா சந்நிதானங்கள்<br>அருளிய ஆசியுரை | 12 |
| கல்லூரிச் செயலரின் வாழ்த்துரை | 15 |
| பதிப்புரை | 17 |
| கல்லூரித் தோற்றுவாய் | 19 |
| 2018 - 2019 ஆம் கல்வியாண்டில்<br>கல்லூரியில் நடைபெற்ற நிகழ்வுகள் | 22 |


**மாணவர்களின் படைப்புகள்**

**கவிதைகள்**

பி.லிட்., தமிழ் மூன்றாமியாண்டு


| | | | |
|---|---|---|---|
| 1 | எனையாண்ட ஈசா | ந. சூரியமூர்த்தி | 30 |
| 2 | நான் பார்த்த உருவம் | கி. அரித்தா | 30 |
| 3 | மழை | கா. கருணாதேவி | 31 |


பி.லிட்., தமிழ் இரண்டாமியாண்டு


| | | | |
|---|---|---|---|
| 4 | சூரியன் | பெ. முத்தழகி | 31 |
| 5 | நிலா | பெ. முத்தழகி | 32 |
| 6 | அம்மா | சே.கோகிலா | 32 |
| 7 | உறவு | சே.கோகிலா | 32 |
| 8 | தோழியும் நானும் | ஆர்த்தி.வெ | 32 |

| | | | |
|---|---|---|---|
| 9 | நிலவு | ஆர்த்தி.வெ | 33 |
| 10 | குரு | கி. குறள்மொழி | 33 |
| 11 | தாயின் அன்பு | கி. குறள்மொழி | 33 |
| 12 | தாய் தந்தை | ஏ. அனிதா | 34 |
| 13 | நண்பன் | சாதனா. ஏ | 34 |
| 14 | தோழியின் பிரிவு | சாதனா. ஏ | 34 |
| 15 | தாய் | சாதனா. ஏ | 34 |
| 16 | பூமி | சாதனா. ஏ | 35 |
| 17 | தந்தை | இரா. சக்திஸ்வரி | 35 |
| 18 | வாழ்க்கை | வனிதா. சு | 35 |
| 19 | முகவரி தொலைத்தவள் | வனிதா. சு | 35 |
| 20 | கைம்பெண் | வனிதா. சு | 36 |
| 21 | அக்கா | வனிதா. சு | 36 |
| 22 | அண்ணன் | வனிதா. சு | 37 |
| 23 | இயற்கையைக் காப்போம் | வனிதா. சு | 37 |
| 24 | நட்பு | வெ.ஸ்ரீவித்யா | 39 |
| 25 | தமிழே! என் உயிரே! | மோ. கோபிகா | 39 |


பி.எஸ்சி. மூன்றாமியாண்டு


| | | | |
|---|---|---|---|
| 26 | தன்னம்பிக்கை | வீ. புவனேஸ்வரி | 40 |


பி.எஸ்சி. முதலாமியாண்டு


| | | | |
|---|---|---|---|
| 27 | இயற்கை | க. விஷாலி | 41 |
| 28 | தமிழ் | க. விஷாலி | 41 |

பி.சி.ஏ. மூன்றாமியாண்டு


| | | | |
|---|---|---|---|
| 29 | தாயின் கருவறை | பா. சரிதா | 41 |


பி.சி.ஏ. இரண்டாமியாண்டு


| | | | |
|---|---|---|---|
| 30 | நினைவுகள் | த. இந்துமதி | 42 |
| 31 | நட்பு | த. இந்துமதி | 42 |
| 32 | தாய்மை | த. இந்துமதி | 42 |
| 33 | மூன்றெழுத்து | காமாட்சி | 43 |


பி.சி.ஏ. முதலாமியாண்டு


| | | | |
|---|---|---|---|
| 34 | நட்பு | ஏ. தனலட்சுமி | 44 |
| 35 | அம்மாவின் அன்பு | த. மகாகவி | 44 |
| 36 | அப்பாவின் அன்பு | த. மகாகவி | 44 |
| 37 | இயற்கையின் அழகு | த. மகாகவி | 45 |
| 38 | அம்மா | பொ. கமலீஸ்வரி | 45 |
| 39 | அப்பா | பொ. கமலீஸ்வரி | 45 |
| 40 | நட்பு | ச. கோதாவரி | 46 |
| 41 | அம்மா! | கே. அகத்தியன் | 46 |
| 42 | அம்மா... | எஸ். யுவராணி | 47 |
| 43 | உழவன்... | எஸ். மகாலட்சுமி | 47 |
| 44 | நட்பு | கா. நந்தினி | 48 |
| 45 | அம்மாவின் கவிதை | சு. ஸ்ரீனுவாசன் | 48 |
| 46 | கல்வி | ச. லட்சயோகன் | 48 |
| 47 | நட்பு | டி. சுவேதா | 49 |
| 48 | அப்பா | டி. சுவேதா | 49 |

| | | | |
|---|---|---|---|
| 49 | அம்மா | ப.ராஜலட்சுமி | 50 |
| 50 | உண்மை | ப.ராஜலட்சுமி | 50 |

பி.ஏ. ஆங்கிலம், மூன்றாமியாண்டு

| | | | |
|---|---|---|---|
| 51 | அம்மா | ந. பொன்னெழில் | 50 |
| 52 | தன்னம்பிக்கை | எம். ஆர்த்தி | 51 |
| 53 | வெற்றி | எம். ஆர்த்தி | 51 |
| 54 | வார்த்தை | ச.பிரியங்கா | 51 |
| 55 | நல்ல நண்பன் | ச.பிரியங்கா | 52 |
| 56 | நட்பு | மு.தமிழரசி | 52 |
| 57 | துணிச்சல் | மு.தமிழரசி | 52 |

பி.ஏ. ஆங்கிலம், இரண்டாமியாண்டு

| | | | |
|---|---|---|---|
| 58 | நட்பு | ர. முகேஷ்வரி | 52 |
| 59 | நட்பின் வலி | மு. அகிலா | 53 |
| 60 | நட்பு | சு. திவ்யா | 54 |


## சிறுகதைகள்


பி.லிட்., தமிழ் மூன்றாமியாண்டு

| | | | |
|---|---|---|---|
| 1 | கடமையும் பொறுப்பும் | கி. அரித்தா | 56 |
| 2 | கல்லூரி நாட்கள் | அனிஷா | 57 |

பி.எஸ்சி., மூன்றாமியாண்டு

| | | | |
|---|---|---|---|
| 3 | நன்மை செய் நாளை மேன்மை வரும் | வீ. புவனேஸ்வரி | 58 |
| 4 | மறைந்து வரும் மனிதநேயம் | அ. சிவரஞ்சனி | 60 |

பி.ஏ. ஆங்கிலம், மூன்றாமியாண்டு

| | | | |
|---|---|---|---|
| 5 | ஏக்கம் - ஊக்கம் : தூக்கம் - துக்கம் | தேவிபாலா | 60 |


## கட்டுரைகள்


பி.லிட். தமிழ் மூன்றாமியாண்டு

| | | | |
|---|---|---|---|
| 1 | பசி | நா. இலக்கியா | 63 |

பி.லிட். தமிழ் இரண்டாமியாண்டு

| | | | |
|---|---|---|---|
| 2 | சுப்பிரமணிய பாரதி | வ. இளவரசி | 65 |
| 3 | சுனாமி | ஆர்த்தி. வெ | 68 |
| 4 | குடும்பம் | சாதனா. ஏ | 70 |

பி.லிட். தமிழ் முதலாமியாண்டு

| | | | |
|---|---|---|---|
| 5 | நட்பு ஆராய்தல் | வீ.ஜெயந்தி | 72 |

பி.சி.ஏ. முதலாமியாண்டு

| | | | |
|---|---|---|---|
| 6 | இன்றைய அறிவியல் வளர்ச்சி | நிஷாந்தி. ம | 76 |


## ஓவியங்கள்


பி.லிட்., தமிழ், மூன்றாமியாண்டு

| | | | |
|---|---|---|---|
| 1 | தமிழ்க் கடவுள் முருகன் | ச.காயத்ரி | 70 |
| 2 | ஸ்ரீமத் சி.பா.சு.த.க.அ. கல்லூரி | கா. கருணாதேவி | 80 |
| 3 | கார்த்திகை தீபம் | கா. கருணாதேவி | 81 |
| 4 | அம்புலிப் பருவம் | கா. கருணாதேவி | 82 |
| 5 | கிருஷ்ணன் | வெ. சிவசங்கரி | 83 |

| | | | |
|---|---|---|---|
| 6 | ஆலிலை விநாயகர் | சி. அரித்தா | 84 |
| 7 | ஒரு குடம் மூன்று பெண்கள் | மு. கௌசல்யா | 85 |
| 8 | தொல்காப்பியர் | வெ.விஜி | 86 |
| 9 | பயணம் | வெ.விஜி | 87 |
| 10 | விலங்கின் அன்பு | பா. வரலட்சுமி | 88 |

பி.லிட்., தமிழ், இரண்டாமியாண்டு

| | | | |
|---|---|---|---|
| 11 | சக்தி வடிவேலன் | ஏ. சாதனா | 89 |
| 12 | சிவபெருமான் | இரா.சக்தீஸ்வரி | 90 |
| 13 | வள்ளுவரும் பாரதியும் | வ.இளவரசி | 91 |
| 14 | இயற்கை | வ. இளவரசி | 92 |
| 15 | கண்ணன் | ஜெ. ரேவதி | 93 |
| 16 | விநாயகர் | ஏ. அனிதா | 94 |
| 17 | அன்பே சிவம் | சு. வனிதா | 95 |
| 18 | கிருஷ்ணா | செ. கோகிலா | 96 |

பி.லிட்., தமிழ், முதலாமியாண்டு

| | | | |
|---|---|---|---|
| 19 | மன்னனும் மனைவியும் | அ. நித்யா | 97 |

பி.காம், மூன்றாமியாண்டு

| | | | |
|---|---|---|---|
| 20 | விநாயகர் | N. மணிகண்டன் | 98 |

பி.காம்., இரண்டாமியாண்டு

| | | | |
|---|---|---|---|
| 21 | கிள்ளை | A. சிவகாமு | 99 |
| 22 | மயில் | A. சிவகாமு | 100 |
| 23 | கலைமகள் | K. தாரணி | 101 |

பி.காம்., முதலாமியாண்டு

| | | | |
|---|---|---|---|
| 24 | திருமால் | N. ஆனந்தி | 102 |
| 25 | அர்ச்சுனன் | N. ஆனந்தி | 103 |
| 26 | கிருஷ்ணன் | N. ஆனந்தி | 104 |
| 27 | ஆடற்கலை | ப. மஞ்சு | 105 |

பி.சி.ஏ., மூன்றாமியாண்டு

| | | | |
|---|---|---|---|
| 28 | சார்லி சாப்லின் | B. சரிதா | 106 |

பி.சி.ஏ., முதலாமியாண்டு

| | | | |
|---|---|---|---|
| 29 | முருகன் | R. நர்மதா | 107 |

பி.ஏ. ஆங்கிலம், மூன்றாமியாண்டு

| | | | |
|---|---|---|---|
| 30 | பகத் சிங் | N. பொன்னெழில் | 108 |
| 31 | மலர் | இரா. நிவேதா | 109 |
| 32 | சோலையின் மௌனம் | R. லாவண்யா | 110 |
| 33 | முப்பொழுதும் துணை | R. லாவண்யா | 111 |

பி.ஏ. ஆங்கிலம், இரண்டாமியாண்டு

| | | | |
|---|---|---|---|
| 34 | தாயின்அரவணைப்பு | S. சுஜிதா | 112 |

பி.ஏ. ஆங்கிலம், முதலாமியாண்டு

| | | | |
|---|---|---|---|
| 35 | விநாயகர் | R. குமரேசன் | 113 |
| 36 | கிள்ளை | K. பச்சையம்மாள் | 114 |

உ

சிவமயம்

ஸ்ரீபாலசித்த குருவே நம

திருக்கயிலாய பரம்பரை மயிலம் பொம்மபுர ஆதீனம்
ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் திருமடம்
மயிலம் – 604304, விழுப்புரம் மாவட்டம்

*மயிலம் பொம்மபுர ஆதீனம் சீர்வளர்சீர் குருமகா சந்நிதானம்*

## 20ஆம் பட்டம் ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்

*அருளிய* **ஆசியுரை**

*அம்மா சிவஞானி அடிக்கமலம்*
*மும்மாயை கடந்து முயங்குமது*
*சும்மா தலைமீது சுமத்தினனால்*
*கைம்மாறு உளதோ கடையே னிடையே*

*உலக உயிர்களுள் மானுடப்பிறவி மிகமிக அருமையுடையது. இதனை உணர்ந்தே ஔவையார்*

*‘அரியது கேட்கின் வரிவடி வேலோய்*
*மக்கள் யாக்கையிற் பிறத்தலும் அரிதே*
*மக்கள் யாக்கையிற் பிறந்த காலையும்*
*மூங்கையும் செவிடும் கூனும் குருடும்*
*பேடும் நீங்கிப் பிறத்தலும் அரிதே....*

*என்று பாடியுள்ளார். சிறப்புடைய மானிடப் பிறவி வாய்க்கப் பெற்றோர் அப்பிறவியின் பயனடையும் வழியை ஆராய்ந்து தேடிச் செல்லுதுல் வேண்டும்.*

*“உய்த்துணர்வு என்னும் ஒளிகொள் விளக்கேற்றி*
*வைத்து அவனை நாடி வலைப்படுத்தேன்”*

*என்பது அருளாளர் வாக்கு. ஞானமே பக்தி நிலையாக முதிர்கின்றது. இதனைத்தான் “ஞானம் கனிந்த நலம்” என்பர். எங்கெங்கு மகான்களும் ஞானிகளும் இருக்கின்றார்களோ அங்கெல்லாம் அன்பும் அருளும் பெருகி ஞானம் வழிந்தோடும்.*

பக்தி வளர்ந்து முழுநிலையை அடையும்போது இறைவனைக் காணலாம். இதற்கு மனிதர்கள் கடக்க வேண்டிய படிநிலைகள் ஐந்து. தெய்வத்தை தரிசிக்க ஆர்வம் கொள்ளுதல், தெய்வதரிசனத்திற்காகக் காத்திருத்தல், ஆன்மாவின் ஏக்கம், தெய்வீகத் தோற்றம், தெய்வத்துடன் சந்திப்பு.

இந்நிலையடைந்த ஞானிகளின் இதயத்தில் பரம்பொருள் திருக்கோயில் கொண்டிருப்பான். கயிலை மலையும் மயில மலையும் இறைவனின் இருப்பிடங்களாயினும் அவ்விடங்களில் இருப்பது சமயம் பார்த்து அடியார்களின் மனதிலே புகுவதற்குத் தான் என்று நாம் நம்ப வேண்டும்.

இதனை நன்கு உணர்ந்த சித்தர்களும் யோகியர்களும் ஞானியர்களும் தத்துவ வித்தகர்களும் பிற அருட்செல்வர்களும் தம் வாழ்வாலும் வாக்காலும் தாம் பிறந்த தேசத்தை ஞான பூமியாக உலகறியச் செய்தனர்.

எத்தனை கோடி பணம் இருந்தாலும் வாழ்வில் நிம்மதி வேண்டும். நிம்மதியைப் பொருள் கொடுத்து வாங்க முடியாது. அருள்கொண்டுதான் பெற முடியும். நிம்மதியற்ற வாழ்க்கை பகலவன் இல்லாத ஆகாயம் போன்றது. நிலையான நிம்மதியை இறைவனால் மட்டுமே தரமுடியும். ஆகவே, பக்தி மனித குலத்திற்கு அருள்வழிப்பட்ட புதிய சக்திகளை வழங்க வேண்டுமே தவிர, மனித குலத்திற்குப் புறம்பான கொள்கைகளையோ, மூடநம்பிக்கைகளையோ தந்துவிடக் கூடாது.

ஈடு இணையற்ற உயர்தனிச் செம்மொழியான தமிழ்மொழியும் அதன் சொற்களும் அனைவருக்கும் பொதுவாயினும் கையாள்பவர்களைப் பொறுத்து மென்மையும், வன்மையும் எழிலும் ஏற்றமும், தெளிவும் திட்பமும் பெற்று விளங்கும் தன்மை கொண்டது. எனவேதான் சங்கத்தமிழ், வள்ளுவத் தமிழ், கம்பர் தமிழ், இளங்கோ தமிழ் என்று நூல்களை எழுதியவர் மீது அதனை ஏற்றிச் சொல்லுவர்.

இதுபோலவே பக்திப் பேருலகில் நால்வர் தமிழ் என்று நானிலமே போற்றும் வண்ணம் அப்பர், சம்பந்தர், சுந்தரர் மாணிக்க வாசகர் ஆகிய நால்வரும் இறைவனின் பெருமையைப்

போற்றி எண்ணற்ற பாக்களை இயற்றித் தமிழ் வளர்த்தனர். இவர்கள் காலத்தில்தான், அகமும் புறமும் மட்டுமே கவிதைக்குரிய பாடுபொருள் என்று இருந்த நிலைமாறி இறைவழி செல்லும் புதிய ஒளிச்சுடர்களாகக் கவிதைகள் ஒளிர்ந்தன.

பக்திப்பாடல்கள் இறைவனைப் போற்றுகின்ற வாழ்த்துப் பாடல்களாக மட்டும் அமையாமல் வாழ்க்கைத் தத்துவங்களை விளக்குகின்றன. தீமையை நீக்கி நன்மைக்கு வழிகாட்டும் கலங்கரை விளக்கங்களாகக் காட்சித் தருகின்றன.

கல்லூரிகளில் மாணவர்களின் படைப்பாக வெளிவரும் ஆண்டுமலர் தேர்ந்த கருத்துக்களின் பெட்டகமாக இருக்கவேண்டும். கண்ணதாசனின் கைப்பட்டு அழகான தமிழ் மாணவர்களின் கரம்பட்டு மிடுக்கும் ஏற்றமும் பெற்றுத் திகழவேண்டும்.

கல்லூரியில் பணிபுரியும் பேராசிரியர்களும் இதை கவனத்தில் கொண்டே மாணவர்களைச் செம்மைப்படுத்தி வருகின்றனர். கற்பித்தல் என்பதைத் தாண்டி மாணவர்களின் படைப்புத்திறனை வெளிக்கொணரும் நிலையில் அவர்களது படைப்புக்களோடு ஆண்டு மலர் ஆண்டு விழாவின் போது வெளியிடப்பெறுகிறது.

இந்நூலில் மாணவர் தம் கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள், ஓவியங்கள் எனப் பல்வேறு படைப்புகள் இடம்பெற்றுள்ளன. மாணவர்களின் படைப்பாற்றல் மேன்மேலும் செழிப்புற்று விளங்க எல்லாம் வல்ல ஸ்ரீ பாலசித்தர் ஆதி சிவஞான பாலய சுவாமிகள் குருவருளும் மயிலந்தண் மணக்கோல மாமுருகன் திருவருளும் நிறைந்து விளங்குவதாகுக.

**சிவா முருகா**

ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்
20ஆம் பட்டம்
மயிலம் பொம்மபுர ஆதீனம்

## கல்லூரிச் செயலரின் வாழ்த்துரை

"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவர்க்கு
மாடல்ல மற்றை யவை"

என்பார் திருவள்ளுவர். நாம் பிறக்கும்போது இவ்வுலகிற்கு எதையும் கொண்டு வருவதில்லை, இவ்வுலகை விட்டுச் செல்லும்போது கொண்டு போவதுமில்லை. வாழும் வாழ்க்கையில் இடைப்பட்ட காலத்தில் கல்விச் செல்வத்தைப் பெற்று இன்புற்று வாழ வேண்டும்.

"வறுமையை நினைத்து பயந்து விடாதே ஒரு
திறமை இருக்கு மறந்துவிடாதே."

என்று பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரனார் கூறியது போலவே இன்றைய காலகட்டத்தில் நம் நாட்டில் மட்டுமல்லாமல் உலகெங்கிலும் மாணவர்களின் திறமைகள் அதிகம் பேசப்படுவது யாவரும் அறிந்த உண்மை.

நம்பிக்கைத் தூண்களாக மாணவர்கள் கருதப் படுகிறார்கள், குறுகிய வட்டத்திற்குள் மாணவர்களை வைக்காமல் அவர்களின் திறமைகளையும், தனித்தன்மைகளையும் வெளிக்கொணர நாம் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். காற்றாடி போல வானுயரப் பறந்து மாணவர்கள் சாதனை படைக்க வேண்டும்.

"இந்த உலகம் ஆற்றல் நிறைந்தவர்க்கே உரியது" என்பதை உளங்கொண்டு ஆற்றல் நிறைந்த மாணவ சமூகத்திற்குத் தக்கதொரு வாய்ப்பை வழங்கும் களமாகக் கல்லூரி ஆண்டு மலர் சிறப்பிடம் வகிக்கிறது. கவிதை, கட்டுரை, சிறுகதை, ஓவியம் எனப் பல்வேறு நிலைகளில் மாணவர்தம் படைப்புகள் சிறந்து நிற்கின்றன.

தூண்டா விளக்காய் விளங்கும் மாணவர்களை ஆசிரியர்களின் மலர்க்கரத்தால் ஏற்றி ஒளிர்ந்திட வைப்போம். மாணவர்களின் செயல்களைக் கண்டு முத்தென வானத்தின்

நட்சத்திரம் போல் மின்னிடச் செய்வோம். கல்லூரிச் சோலைக்குள்ளே மாணவர்களுக்கு ஒரு அடையாளத்தை ஏற்படுத்துவோம்.

நூற்பல கற்பித்த போதும், நூலால் உயரும் பட்டம் போல் மாணவனை உயர்த்திக் கொண்டே செல்வோம். எட்டாத வானத்தைத் தொட்டுவிடத் தூண்டும் இளவயதினில் சாதனைகள் பல படைக்கச் செய்வோம் என்ற நோக்கில் தொடர்ந்து எம் கல்லூரிப் பேராசிரியர்களின் ஊக்குவித்தலோடு மாணவர்களின் படைப்புகள் வெளிவருகின்றன.

நட்பு, பெண்மை, இலட்சியம், முயற்சி, தாய்மை என்பன போன்று பல தலைப்புகளில் கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள், ஓவியங்கள் சிறந்து நிற்கின்றன. மேன்மேலும் மாணவர்தம் படைப்பாற்றல் சிறந்து விளங்க எல்லாம் வல்ல குருவருளையும் திருவருளையும் சிந்தித்து வாழ்த்துகின்றோம்!

**சிவத்திரு. இராஜீவ் குமார் இராஜேந்திரன்**
செயலாளர்,
ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள்
தமிழ்,கலை,அறிவியல் கல்லூரி,
மயிலம் - 604 304.

## பதிப்புரை

"எளிய நடையில் தமிழ் நூல் எழுதிடவும் வேண்டும்
இலக்கண நூல் புதிதாக இயற்றுதலும் வேண்டும்
வெளியுலகில் சிந்தனையில் புதிது புதிதாக
விளைந்துள்ள எவற்றினுக்கும் பெயர்களெலாங் கண்டு
தெளிவுறுத்தும் படங்களொடு சுவடியெலாம் செய்து
செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்வதுவும் வேண்டும்"

எனத் தமிழைப் போற்றுவார் பாவேந்தர் பாரதிதான். அத்தகைய பெருமைவாய்ந்த உலகின் மூத்த மொழியான தமிழும் சைவமும் தழைத்தோங்கச் செய்கின்ற மயிலம் பொம்மபுர ஆதீனத்தின் குருவருளாலும், மயிலம் மாமுருகன் திருவருளாளும் 1938 - ஆம் ஆண்டு முருகன் செந்தமிழ்க் கழகத்தின் இணைப்பானை பெற்று இயங்கி வந்த ஸ்ரீமத் சிவஞான பாலயசுவாமிகள் தமிழ்க் கல்லூரி 2003-2004 ஆம் ஆண்டு முதல் அரசு ஆணைப்படி திருவள்ளுவர் பல்கலைக் கழகம் வேலூர் இணைப்பானை பெற்ற கல்லூரியாக இயங்கி வருகிறது.

பி.லிட். தமிழ் பட்டப்படிப்பு மூன்றாண்டகள் மானியப் பிரிவிலும், முதுகலைத் தமிழ் (2003-04) ஆய்வியல் நிறைஞர், பி.எச்.டி தமிழ் ஆய்வுப் படிப்புகள் (2005-2006) சுயநிதிப் பிரிவிலும் இயங்கி வருகின்றன.

2007 -2008- ஆம் கல்வியாண்டு முதல் ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ், கலை, அறிவியல் கல்லூரி எனப் பெயர் மாற்றம் செய்யப்பெற்று 2008-2009 முதல் பி.காம் வணிகவியல், பி.எஸ்.சி - கணினி அறிவியல், 2009-10 முதல் பி.சி.ஏ. கணினிப் பயன்பாடு, 2011-12 முதல் பி.ஏ.ஆங்கிலம், எம்.காம் வணிகவியல், பி.எச்.டி வணிகவியல், 2016 - 17 முதல் எம்ஃபில் வணிகவியல், எம்.எஸ்சி. கணினி அறிவியல் ஆகிய பாடப் பிரிவுகள் சுயநிதிப் பிரிவில் தொடங்கப் பெற்று இயங்கி வருகின்றன.

*ஆண்டுதோறும் மாணவர்களின் படைப்பாற்றலை வளர்க்கும் நோக்கில் கல்லூரி ஆண்டு விழாவில் ஆண்டுமலர் ஒன்று வெளியிடப்பெறுகின்றது.*

*குரு, தாயன்பு, தன்னம்பிக்கை, நட்பு, விடாமுயற்சி, மழை, உறவுகள், பசி முதலிய பல்வேறு பொருண்மைகளைக் களமாகக் கொண்டு மாணவர்களின் படைப்புகள் 81-வது ஆண்டு மலராக வெளிவருகிறது. இதில் மாணவர்களின் கவிதைகளும் சிறுகதைகளும் கட்டுரைகளும் ஓவியங்களும் இடம் பெற்றுள்ளன.*

*"அருவினை யென்ப உளவோ கருவியான்*
*காலம் அறிந்து செயின்" (குறள்-483)*

*எனும் வள்ளுவரின் வாய்மொழிக்கு ஏற்ப தகுதியான காலத்தை அறிந்து தகுந்த கருவிகளோடு செயல்களைச் செய்தல் வேண்டும். அதனைக் காட்டிலும் செயற்கரிய செய்ய வெறெதுவும் இல்லை என்பதை உணர்ந்து மாணவர்கள் தம் திறமைகளைப் படைப்புகளின் வழி வெளிப்படுத்தியுள்ளார். இளைய சமூகத்தின் படைப்பாற்றலும், உயரிய சிந்தனைகளும் மேன்மேலும் பெருக எல்லாம் வல்ல குருவருளும் திருவருளும் துணைநிற்கும் என்பது உறுதி.*

**முனைவர் ச. திருநாவுக்கரசு**
எம்.ஏ.,பி.எட்., எம்.ஃபில்., பிஎச்.டி.
துணை முதல்வர் மற்றும் தமிழ்த்துறைத் தலைவர்
ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ், கலை,
அறிவியல் கல்லூரி, மயிலம்.

## ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ், கலை & அறிவியல் கல்லூரி தோற்றுவாய்

மயிலம் பொம்மபுர ஆதீனம் பதினெட்டாம் பட்டம் குருமகா சந்நிதானங்கள் சைவத்தையும், தமிழையும் இரு கண்களெனப் போற்றி அருளாட்சி செய்தவர்கள். மயிலம் பொம்மபுரத் திருமடங்களிலும் சைவத்தையும் தமிழையும் வளர்க்கப் புலவர் பெருமக்களைக் கொண்டும் தானும் ஒரு புலவராகவும் நின்று பல்வேறு சொற்பொழிவுகளை நடத்தியருளியவர்கள். அச்சமயத்தில் தமிழ்மீது கொண்ட பற்றினால் முருகன் செந்தமிழ்க் கழகத்தைக் கி.பி.1937 ஆம் ஆண்டில் தோற்றி வைத்துத் தமிழ்க் கல்லூரியைத் தொடங்க விழைந்தார்கள். ஸ்ரீலஸ்ரீ சந்நிதானங்கள் ஆசியோடு மயிலம் சார்பதிவாளர் அலுவலகத்தில் சார்பதிவாளராகப் பணியாற்றிய திரு.இராஜா முதலியார் அவர்களும், தென்னார்க்காடு மாவட்டக் கல்வி அலுவலராகப் பணியாற்றிய திரு.ச.சச்சிதானந்தம் பிள்ளை அவர்களும் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் திரு.டி.எம்.நாராயணசாமிப் பிள்ளை அவர்களும், உயர்திரு. ஏ.எஸ்.மன்னாடி நாயர், உயர்திரு. பி.காமேஸ்வரராவ் ஆகியோரது நல்லுதவியால் 14.07.1938 இல் முருகன் செந்தமிழ்க் கழகத்தின் சார்பில் தமிழ்க் கல்லூரி உருவெடுத்தது.

சென்னைப் பல்கலைக்கழகத்தால் நியமனம் செய்யப்பெற்ற ஆணையர் வித்துவான் உயர்திரு. டி.கே. நடேஸசர்மா அவர்களின் அறிக்கை அடிப்படையில் (கடித எண். A/336/D/03.08.1941) சென்னைப் பல்கலைக்கழக இணைப்பாணை பெறப்பெற்றது.

கிராமப்புற மாணவர்கள் தமிழில் புலமை பெற வேண்டும் என்ற நோக்கில் தொடங்கப் பெற்றது இக்கல்லூரி. தென்னாற்காடு, வடாற்காடு, சென்னை, செங்கல்பட்டு, சேலம், திருச்சிராப்பள்ளி மாவட்டங்களைச் சேர்ந்த பலர் இக்கல்லூரியில் பயின்று ஆதீனக் கர்த்தர்களாகவும், பல்கலைக்கழகப் பேராசிரியர்களாகவும், முதல்வர்களாகவும், மேல்நிலைப்பள்ளி, உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களாகவும் பணியாற்றி ஓய்வு பெற்றும் பணியாற்றிக் கொண்டும் உள்ளனர்.

*சென்னைப் பல்கலைக்கழகத் தேர்வில் தமிழ்ப் புலமையில் முதன்மை பெறும் மாணவர்க்கு அளிக்கப்பெறும் பரிசுத்தொகை ரூபாய் ஆயிரத்தினை ஆண்டுதோறும் இக்கல்லூரி மாணவர்களே பெற்று வந்துள்ளனர்.*

*இக்கல்லூரியில் சென்னைப் பல்கலைக்கழக இணைப் பாணையுடன் பதினெட்டாம் பட்டம் குருமகா சந்நிதானங்களின் அருட்பார்வையின் வண்ணம்,*

**1. வித்துவான் - தமிழ்ப் பட்டயப் படிப்பு**

*நான்கு ஆண்டுகள் 1938 - 39 முதல் 1969 - 70 வரை சீரும் சிறப்புமாக இயங்கி வந்தது. அவர்கள் காலத்திற்குப் பிறகு பத்தொன்பதாம் பட்டம் குருமகா சந்நிதானங்கள் அவற்றை மெருகூட்ட முயன்று,*

**2. புலவர் தமிழ் - பட்டயப் படிப்பு**

*நான்கு ஆண்டுகள் 1970 - 71 முதல் 1974 - 75 வரை*

**3. பி.லிட் தமிழ்ப் பட்டப் படிப்பு**

*நான்கு ஆண்டுகள் 1975 - 76 முதல் 1979 - 80 வரை*

**4. பி.லிட் தமிழ்ப் பட்டப்படிப்பு**

*மூன்று ஆண்டுகள் 1980 - 81 முதல் இன்று வரை சிறந்த முறையில் இயங்கி வருகிறது. மேலும்,*

**5. முதுகலைத் தமிழ் - பட்டப் படிப்பு**

*இரண்டாண்டுகள் (சுயநிதிப் பிரிவு) 2002 - 2003 முதல் சென்னைப் பல்கலைக்கழக இணைப்பாணையுடன் தொடங்கப் பெற்று 2003 - 2004 முதல் திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தில் இணைக்கப் பெற்று இயங்கி வருகிறது.*

*இந்நிலையில் திருமட வளர்ச்சிக்கும், கல்லூரியின் மேம்பாட்டிற்கும் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர்களும், 19ஆம் பட்டம் குருமகா சந்நிதானங்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாகவும் திகழ்ந்த* **திரு.குமார.சிவ. இராஜேந்திரன் B.Com., B.L** *அவர்கள் 2004 முதல் கல்லூரிச் செயலாளராகப் பொறுப்பேற்றுக் கல்லூரியை உயர்த்த வேண்டும் என்ற நல்ல நோக்கத்தில் கீழ்க்கண்ட பாடப் பிரிவுகளைத் தொடங்கி வைத்தார்கள்.*

**எம்ஃபில் தமிழ் – ஆய்வுப்படிப்பு, பகுதி நேரம் – முழுநேரம்**

*2005 - 06 முதல்*

**பிஎச்.டி தமிழ் ஆய்வுப் படிப்பு, பகுதி நேரம் – முழுநேரம்**

*2005 - 06 முதல்*

*மேலும் 2007 - 08 ஆம் ஆண்டு முதல் கிராமப்புற மாணவர்கள் தமிழில் மட்டுமின்றிப் பல்துறையில் பயின்று உலக அரங்கில் இடம் பெற வேண்டும் என்ற நோக்கில் ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ், கலை, அறிவியல் கல்லூரி எனத் தமிழ்நாடு அரசு உயர்கல்வித் துறை அரசு கடிதம் (நிலை) எண்:223, நாள்: 09.07.2007 அரசு ஆணையின் வண்ணம் பெயர் மாற்றம் செய்யப்பெற்று 2008 - 2009 ஆம் ஆண்டு முதல்,*

1. *பி.எஸ்சி. கணினி அறிவியல் மூன்றாண்டுகள் 2008 - 09 முதல்*
2. *பி.காம். வணிகவியல் மூன்றாண்டுகள் 2008 - 09 முதல்*
3. *பி.சி.ஏ. கணினி பயன்பாடு மூன்றாண்டுகள் 2009 - 10 முதல்*
4. *பி.ஏ. ஆங்கிலம் மூன்றாண்டுகள் 2011 - 12 முதல்*
5. *எம்.காம். வணிகவியல் இரண்டாண்டுகள் 2011 - 12 முதல்*
6. *எம்.எஸ்சி. கணினி அறிவியல் 2016 - 17 முதல்*
7. *எம்ஃபில் வணிகவியல் 2016 - 17 முதல்*

*ஆகிய பாடப்பிரிவுகள் சுயநிதிப்பிரிவில் தொடங்கப் பெற்றுக் கிராமப்புற ஏழை மாணவர்களின் ஏற்றத்திற்கு வழி வகுத்துக் கொண்டு வருகிறது.*

*12B, 2F தகுதிகளைப் பெற்ற இக்கல்லூரி 2016 -2017 ஆம் கல்வியாண்டில் பல்கலைக்கழக மானியக் குழுவின் (UGC) தேசியத் தர மதிப்பீட்டுத் தகுதியைப் (NACC) பெற்றுள்ளது. 2017 - 2018 ஆம் கல்வியாண்டில் கல்லூரியின் செயலராகச்* **சிவத்திரு. இராஜீவ் குமார் இராஜேந்திரன்** *அவர்கள் பொறுப் பேற்றுக் கொண்டார்கள்.*

*தற்போது இக்கல்லூரி 20 ஆம் பட்டம் ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகளின் குருவருள் ஆசியுடன் சீரும் சிறப்புமாக இயங்கி வருகிறது.*

## 2018 - 2019 ஆம் கல்வியாண்டில் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்வுகள்

### 1. தமிழ்த்துறை நிகழ்வுகள்

*1. பி.லிட். வாரக் கருத்தரங்கக் கூட்டங்கள் - 16*

*2. முதுகலைத் தமிழாய்வுத்துறை வார ஆய்வரங்குகள் - 12.*

*3. சிறப்பு ஆய்வரங்கம் - 05.*

*4. பயிலரங்கம் 1*

*5. பன்னாட்டுக் கருத்தரங்கம் - 2*

*6 உலகத் தாய்மொழி தின விழா*

*7 தமிழர் திருநாள் விழா*

*8. கல்லூரி நிறுவியோர் விழா*

*9. சிவப்பிரகாச சுவாமிகள் குருபூசை விழா*

*10. மார்கழி மாதம் திருப்பாவை, திருவெம்பாவைப் பாடல்கள் வழிபாட்டுக் கூட்டத்தில் பாடும் நிகழ்வு.*

### 2, பி.காம் (வணிகவியல்) துறை நிகழ்வுகள்

**ACADEMIC ACHIEVEMENT**

1) **R.Sangavi**, Register No: 40716U10052 secured **100/100 Marks** in Business statistics and Operation Research- I subject in the Thiruvalluvar University Exam held for the year April-May 2018.
2) **N. Ananthi**, Register No: 40718U10003 secured 100/100 marks in Financial Accounting- I ( Sub.Code:BCM11) in the Thiruvalluvar University Exam held for the year Nov- Dec 2018

**SEMINARS AND WORKSHOPS**

1) Dr. KayalvizhiBalamurugan Asst. Professor Department of Home Science, Bharathidasan Govt. College for Women,

Puducherry conducted a Bridge Course on 03/07/2018, Topic "**Nutrition & Health Education for Adolescence**".

2) Mr. A Irudayaraj, from Panchayat Union Middle school, Vadakkumelmampattu conducted a Bridge course on 04.07.2018, Topic **"Importance of Communication skills**".

3) Dr. V. Arulmurugan, Asst Professor, Dept of Commerce, Commerce School of Management, Pondicherry University conducted a Bridge Course on 06.07.2018, Topic " **Skilling Young India".**

4) One Day Workshop **" Value Addition to the Commerce curriculum through Professional Courses" by** CS Azhaguraja N, ACS, Asscociate Member of ICSI, New Delhi on 01.08.2018.

5) One day seminar on " **Recent Trends in Entrepreneurship Development in India**", by Dr. K. Krishnamurthy, Assistant Professor of Commerce, Periyar Govt. Arts college, Cuddalore.

**Citizen Consumer Club:**

| | | |
|---|---|---|
| Programme | : | A Special Seminar on Consumer Awarness<br>Programme Theme: Plastic Ban in India |
| Date of the Programme | : | 15/03/2019 |
| Chief Guest | : | S. V. Namachivayam, President,<br>State Consumer Protection Council,<br>Tamil Nadu. |

**Industrial Visit:**

**B.Com Students 3rd year - One days Industrial Visit.**

| **Industry Name** | **No. of Students** | **Date** |
|---|---|---|
| M/s. MaulikLeathercrafts Pvt. Ltd,<br>Pipdic Industrial Estate,<br>Mettupalaym,Pondicherry – 605 09 | 63 | 12.09.2018 |

**M.com and B.com – Two day Industrial Visit.**

| Industry Name | No. of Students |
|---|---|
| Greentech Industries,No:45, Elango Nagar ,Shoba Nagar Road,Avarampalayam Coimbatore- 06 Ph.No: 0422 2563120 Email:saravan.cms@gmail.com | **60nos** |

**Events and Seminar at Other the colleges:**

1) Our Department M.Com Students participated and presented at National Conference held on **ST. Ann's College of Arts & Science, Tindivanam on 1 September.**
2. Our B.Com students participated and won prices in the event "A State Level Management meet "Astute-2K19" on 08.02.2019 at Suriya Group of Institutions School of Management studies, Vikravandi, VillupuramDist on 08.02.2019.

**Winning Details**

- N. Aanathi, B.com I year got 1st Prize in the Drawing Competition. She got Cash Award of Rs.300/-
- The following students won First prize in the TREASURE – HUNT Competition and got Cash Award of Rs.2500/
  a) Nishanthani. K – I.B.Com
  b) Anitha. T – III B.Com
  c) Mohanraj. P – III B.Com
  d) Mohanraj. R – III B.Com
  e) Raffath Ali. K – III B.Com

**Job Placement:**

1) MS Consulting, Villupuram conducted recruitment on 03.09.2018 for Job Placement. The following students were participated.

1. M. Premkumar
2. V. Prakash
3. I. Anand
4. M. Madhan
5. R. Jayakumar

**MOC( Memorandum of Understanding)**

1) General Memorandum of Understanding (MOC) between SrimathSivagnanaBalayaSwamigal Tamil, Arts &Science College, Mailam & ***Edinbridge Skill Solutions Pvt. Ltd.,*** (Official and Certified Training Partner of Tally) 29/E, 2nd Floor, Medavakkam main road, Diagonally oppkeelkattalai Bus stand, Keelkattalai, Chennai – 600 017, Represented by Mr. A.Selvam Director.

**Tally ERP9 Classes for UG Students**

1) Edinbridge Skill Solutions Private Limited Conducted the Tally Course- Financial Accounting using Tally ERP9 for UG Students of Commerce. The Course was conducted for III BCOM Students and 50 were participated. Students undergone training on Financial Accounting using Tally ERP9 were as under

### 3, பி.எஸ்சி., பி.சி.ஏ. துறை நிகழ்வுகள்

1 17/07/2017: Conducted a **Forum** through **"Cyber Art Association"Topics:** 9 Dimension, Windows 10 OS, Google Product

1 01.07.2018 Organized One Session in Bridge Course for the first year students. Topic: Recent Trends in Computer field/ Resource Person: Dr. P. PREMA, ASSISTANT PROFESSOR, DEPARTMENT OF COMPUTER SCIENCE, THIRUVALLUVAR UNIVERSITY CONSTITUENT ARTS AND SCIENCE COLLEGE, KALLAKURUCHI.

2 15.08.2018 Independence Day celebration - Organized and Coordinated

**Highlights of Event:**

Parade by NSS, Flag Hoisted by the Principal, Flag song, Speeches about country development, freedom fighters, and Patriotism (both in English and Tamil language)

3. 05.09.2018 Department Seminar "Futuristic World of Computer" Dr. K. SANKAR, HOD, DEPARTMENT OF COMPUTER SCIENCE, THIRUVALLUVAR UNIVERSITY CONSTITUENT ARTS AND SCIENCE COLLEGE, KALLAKURUCHI.
4. 26.01.2019 Organized Educational tour to Velliangiri malai, Maruthamalai, Thenthiruppathi & Ooty for Final year B.Sc., Computer Science and Computer Application

   27.01.2019 Students

   26.01.2019 Industrial Visit – NIAGARA AUTOMATION SOLUTIONS, Coimbatore – 641110

   27.01.2019 Industrial Visit – TAN TEA FACTORY Ooty
5. 09.02.2019 SELFIE '19

   National Level Technical Symposium.

   Events : Debugging, Paper Presentation, Poster Presentation, Adzap, Vegetable Carving, SELFIE Contest.
6. Our UG final year Computer science student V. Bhuvaneswari won 5$^{th}$ Prize (National Level) 72$^{nd}$ Independence Day National Level Essay Competition, Kaviyarasar Kalai Tamil Sangan, Namakkal
7. Our Department UG students acted as Social Interaction Tutor in various schools in and around Villupuram district.
8. Our UG & PG students presented and participated papers in SEMIANR , one day National Conference And National workshop.
9. PG and UG students (21) participated Wikitechy World Record Achievement , Game & Hack

### 4, பி.ஏ. ஆங்கிலத் துறை நிகழ்வுகள்

1. Tableau performances by first and third year students on **Dr. Faustus' "Seven Deadly Sins"** on 26 July 2017.

2. Students from Third Year participated and presented paper in an international conference on "Social Consciousness in Literature" at Thiruvalluvar University College of Arts and Science, Thiruvennainallur on July 28, 2018.
3. A Special Seminar conducted on "Post Colonial Literature" by Dr.V.K.Sumitha on August 13,2018.
4. Second Year students participated in state level essay writing, poetry writing, and drawing competition and received appreciation certificates on 15.02.2018.
5. Second Year student E.Saritha participated in Pavendar Bharathidasan Poetry Recitation Competition and received certificate of appreciation on 09.09.2018.
6. Drama performance given by Third Year students based on Shakespeare's play, "Tempest" on Sep 18,2018.
7. International smile day has been celebrated through by Poster Presentation on Oct 5, 2018.
8. Drama performance given by Third Year students based on Shakespeare's Play. "As You Like It" on Oct 29, 2018.
9. Tableau Performance given by First and Second year students on " Women Empowerment" which based on G.B. Shaw's play " Pygmalion" on Jan 8, 2019.
10. Health Awareness Program for girls conducted by ANM from Mailam Primary Health Centre on Feb 8, 2018.
11. In behalf of our English students Second Year and Third Year who participated and presented a paper on " Media: A Tool for Cultural and Social Development" at Akilandeswari Women's College, Wandiwash, on 27th Feb, 2019 and their paper published under UGC approved Journal with ISBN code.
12. First year student N.Rubavani participated in National level " Jug of War" game was held at Vellore.
13. R.Nivedha from Third year student who won cash prize from sub- collector for the state level essay writing competition.

14. Literary Quiz has been conducted weekly once in our Department.

## 5, நூலக நிகழ்வுகள்

1 Library has been conducted for One National Seminar on "Scientific Publication and Evaluation : Writing Research Papers, Citation Analysis, Book Publishing, Plagiraism & Copyright (NSSPC 2018)" on 13th October 2018.

## 6. நாட்டு நலப்பணித் திட்ட நிகழ்வுகள்

*02.08.2018* டெங்கு காய்ச்சல் விழிப்புணர்வு மற்றும் தடுப்பு நடவடிக்கைகள்

*15.08.2018* சுதந்திர தின விழா

*10.09.2018* தீ விபத்துத் தடுப்பு நடவடிக்கைகள் மற்று விழிப்புணர்பு

*17.09.2018* குருதிக்கொடை முகாம்

*31.10.2018* தேசிய ஒற்றுமை நாள்

*26.01.2019* குடியரசு தின விழா

*30.01.2019* நெகிழி ஒழிப்பு குறித்த ஒருநாள் சிறப்பு முகாம், கூட்டேரிப்பட்டு

*05.02.2019* சாலை பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு குறித்த மனிதச் சங்கிலி

*11.03.19 17.03.19* சிறப்பு முகாம், தென்சிறுவளூர் கிராமம்

*22.03.19* உலக தண்ணீர் தினத்தையொட்டி தண்ணீர் சேமிப்பு குறித்த விழிப்புணர்வுப் பேரணி

## 7. இளைஞர் செஞ்சிலுவைச் சங்க நிகழ்வுகள்

- *10.08.2018- குடற்புழு ஒழிப்பு நடவடிக்கைகள் மற்றும் விழிப்புணர்வு.*
- *21.10.2018 - உலக யோகா தின விழா.*

# கவிதைகள்

**எனையாண்ட ஈசா (எண்சீர் ஆசிரிய விருத்தம்)**

*தண்ணென்ற செம்மாரி களரென்ற மண்ணின்*
*தலைவிழுந்து கண்ணிமையென் றொன்றுமது போல*
*மண்ணென்ற இன்பமொடு மழையென்ற உள்ளம்*
*மன்னிபுரண் குறிசோர்ந்து கடையிலுனை வேண்ட*
*வெண்ணென்ற திங்களோடு கொன்றையும் சூடி*
*வென்றாயென் உள்ளத்தை மீட்டெடுத்த கண்டாய்*
*விண்ணின்று வெயில்காட்டும் பரிதியொப்ப ஈசா!*
*வீழ்ந்த மழை அனையமனம் நின்பார்த் தாயே!*

*தாயினுக்கே தாயாகி என்னை ஆண்டாய்*
*தரிசுநிலத் தேனாய்நான் கிடக்கின் றேனே*
*நாயினுக்கே அருட்காட்டி நயந்த உன்னை*
*நானுங்கைக் கூப்பிவேண்டி அகம்நல் கேனே*
*காயினுக்கு நேரயெனதுளமுங் கண்டு*
*கரையில்லா பெருங்கடலே கரம்தந் தாயே*
*பாயினுக்கே கிடந்தோனின் பாயை அள்ளி*
*பரந்தமேனி முழுவதுமாய் அணிகின் றாயே!*

***ந. சூரியமூர்த்தி***
*பி.லிட்., மூன்றாமியாண்டு*

**நான் பார்த்த உருவம்**

*காற்றின் உருவம் பார்க்க*
*ஆசைப்பட்டேன் முடியவில்லை*
*நீரின் உருவம் பார்க்க*
*ஆசைப்பட்டேன் முடியவில்லை*
*இறைவனை நேரில் பார்க்க*
*ஆசைப்பட்டேன் முடியவில்லை*
*ஆசைப்பட்டேன் அத்தனை உருவும்*
*என் தாயின் வடிவில்...*

***கி. அரித்தா***
*பி.லிட்., மூன்றாமியாண்டு*

## மழை

*வானில் ஏழு வண்ணங்கள்*
*காட்டுவது மழை!*
*நிலத்தில் பச்சை நிறத்தைத் தருவது மழை!*
*உழவன் முகத்தில் மகிழ்ச்சி*
*தருவது மழை!*
*அழகையூட்ட பல வண்ணப் பூக்களை*
*தருவது மழை!*
*சத்தத்தால் சிசுவுக்கு அச்சம் தருவது மழை!*
*நதிகளில் நீரை*
*நிரப்புவது மழை!*
*மண்ணில் பல வளங்களைக்*
*கொடுப்பது மழை!*
*மழையே!*
*மழையே! நீ வா!......*

**கா. கருணாதேவி**
*பி.லிட்., மூன்றாமியாண்டு*

## சூரியன்

*உன் இளஞ்சிவப்பு நிறத்தைக் காட்டி*
*என் மனதைத் திருடினாய்*
*குளிர்காலத்தில் உன் வெப்பத்தைக்காட்டி*
*என்னைத் தணிவித்தாய்*
*விடியும்போது உன் ஒளியைக் காட்டி*
*மலையின் அழகை ரசிக்கச் செய்தாய்*
*மார்கழி மாதத்தில் உன் வெயிலுக்காக*
*காத்திருக்கச் செய்தாய்*
*இரவில் உன்னைக் காணமுடியவில்லை*
*பகலில் உன்னை விட்டுப் பிரிவதில்லை*

## நிலா

*இரவில் வெளிச்சம் தருவது நீயடி*
*என் வாசல் வந்து என் இதயத்தைக் கேட்பது தாயடி*
*என் வாழ்வில் ஓர் உன்னதமாய்*
*என் இரவில் ஓர் ஒளியாய் இருப்பது நீயடி*

*உயிருக்கு ஒளியாய்*
*உன் வாசல் வந்தால் நீ அழைப்பாய்*
*என் இதயமோ உன்னை அழைக்கிறது*
*என் இதய வாசலுக்கு வருவாயா...*
*என் இதயப் பூட்டைத் திறந்து வாழ்வாயா...*

**பெ. முத்தழகி**
*பி.லிட்.இரண்டாமியாண்டு*

## அம்மா

*பிரசவத்தின்போது குழந்தையை*
*பெற்று எடுக்க வேண்டுமென*
*தன் வயிற்றையே*
*கிழித்துக் கொள்பவளை விட*
*இந்த உலகில்*
*வேறு யாரும் உயர்ந்தவர்கள் இல்லை*

## உறவு

*இருப்பவர்களை விட - உன்*
*அருகில் இல்லாத போதும்*
*உன்னை நினைத்துக் கொண்டு*
*இருப்பவர்களே உண்மையான*
*உறவுகள்!*

**சே.கோகிலா**
*பி.லிட்., இரண்டாமியாண்டு*

## தோழியும் நானும்

*அன்பாய் சில வார்த்தைகள்*
*சிறுபிள்ளைத் தனமாய் சில சண்டைகள்...!*
*துன்பம் வரும் நேரத்தில் உன்தோள்*
*சாய்ந்து சிறு கண்ணீர்த் துளிகள்...!*
*இன்பமாய் உன் கைகோர்த்து மெல்லிசையுடன்*
*நெடுந்தூர நடைபயணம்...!*
*தோல்வியின்போது தன்னம்பிக்கையாக உன் தோள்...!*
*வெற்றி பெறும்போது தழுவிக்கொண்ட*
*புன்னகைப் பூக்களாய் நாம்...!*

*அன்பெனும் கவசத்தால் என்றும் காத்திடுவோம்*
*நம் நட்பை…!*

### நிலவு

*இருளில் எழுந்து வெளியே வருவாய்…!*
*இருண்ட வானில் வெள்ளைப் பூவாக நீ*
*வளர்ந்தாலும் தேய்ந்தாலும் அழகானவள்…!*
*எட்டிச் சென்றாலும் என்னிடம் வருகிறாய்*
*நான் எங்கே போனாலும் பின் தொடர்கிறாய்…!*
*என்னை விட்டு செல்லவும்*
*மனமில்லை உடன் வருகிறாய்…!*
*இரவென்னும் கவிதையின் நாயகியே*
*உற்ற துணையாக வருவாயா*
*என் உயிர்த் தோழியாய்…!*

**ஆர்த்தி.வெ**
*பி.லிட்., இரண்டாமியாண்டு.*

### குரு

*அன்பென்பதை அறிய வைத்தவள் அன்னை*
*ஒழுக்கத்தைக் கற்றுத்தந்தவர் தந்தை*
*இன்ப, துன்பங்களை*
*நன்மை, தீமையைப் புரியவைத்தவர் கடவுள்*
*இவை அனைத்தையும் கல்வி*
*என்ற ஒன்றில் கற்றுத்தந்தவர் ஆசிரியர்*
*உலகியலைக் கடந்த*
*அருளியலைக் காட்டியவர் ஞானகுரு…!*

### தாயின் அன்பு

*எல்லா விளக்குகளிலும் வெளிச்சம்*
*வந்து கொண்டுதான் இருக்கிறது - ஆனால்*
*என் தாயின் கண்களில் இருந்து*
*வெளிவரும் அன்பென்னும் வெளிச்சத்திற்கு*
*விளக்குகளின் வெளிச்சம் ஈடாகுமா?*

**கி. குறள்மொழி**
*பி.லிட்., இரண்டாமியாண்டு*

## தாய் தந்தை

*நான் என் தாய்க்குக் கொடுக்கும்*
*வலிகளுக்கும்*
*என் தந்தை அனுபவிக்கும்*
*ஒவ்வொரு வலிகளுக்கும்*
*காரணம் ஆவது நானே!*
*என் தாய் தந்தையர்*
*எனக்கு எந்த வலியும் தருவதில்லை*
*என்னையே அவர்களின் வாழ்க்கையாக*
*நினைப்பதினால் மட்டுமே!*

***ஏ. அனிதா***
*பி.லிட்., இரண்டாமியாண்டு*

## நண்பன்

*உறவுகள் எனும் உன்னத வார்த்தைகள்*
*நம்மைவிட்டுப் பிரியும் தருவாயில்*
*எதிர்பார்ப்பின் அர்த்தம் தெரியாத ஒருவனே*
*கைகொடுக்கும் என் நண்பன்.*

## தோழியின் பிரிவு

*புள்ளிகள் வைத்த விழிகளாய்*
*அவள் காத்திருக்க..*
*கோலக் கவிமடல் நீ*
*ஏன் வரைய மறந்தாய்*
*தோழி!*

## தாய்

*பல பட்டங்கள் படித்து முடித்தும்*
*உன்னை என்னால் படிக்க முடியலையே!*
*விரைவில் உன்னைப் படித்து முடித்தால்*
*மறுபிறவியில் உந்தன் தாயாக*
*உயிர்பெற வேண்டும்*
*வாய்ப்பு வருமோ!*

## பூமி

*பூமியும் என் தாயும்*
*ஒன்று தான்*
*நாம் எவ்வளவு சேதப்படுத்தினாலும்*
*தாங்கிக் கொள்கிறாள்*
*ஆனால்...*
*அவளின் ஒரு நொடி*
*நடுக்கத்தைக் கூடத்*
*தாங்க முடியவில்லை நம்மால்*

***சாதனா. ஏ***
*பி.லிட்., இரண்டாமியாண்டு*

## தந்தை

*தந்தையின் கைபிடித்து*
*கால்வலிக்கக் கடைக்குச் சென்றாலும்*
*பிடித்த பொருளை வாங்கப் போகிறேன் என்ற*
*மகிழ்ச்சியில் திளைக்கிறது உள்ளம் - ஆனால்*
*என் திருமணத்திற்கு வரதட்சணையாகக்*
*கொடுத்த வண்டியில் ஏறத் தயங்குகிறேன்!*
*காரணம்? என் அப்பா செருப்பு இல்லாமல்,*
*நடப்பதைக் கண்டு...*

***இரா. சக்திஸ்வரி***
*பி.லிட்., இரண்டாமியாண்டு.*

## வாழ்க்கை

*துன்பங்களைத் துடைத்துச் செல்லும்*
*பாதையாய் மாறிவிட்டன*
*மெல்ல மெல்ல!*

## முகவரி தொலைத்தவள்

*பயணங்கள்தான் எத்தனையோ!*
*பயணித்தவர்கள் தான் எத்தனை*
*எத்தனையோ!!*
*தொடக்கமும் தெரியாமல்*

*முடிவும் தெரியாமல்*
*எட்டுத் திசைகளிலும் எல்லைக்கோட்டைத்*
*தாண்டியும் தாண்டாமலும்*
*என்னுடன் பயணித்தவர்கள்*
*எத்தனை எத்தனையோ!!!*
*எல்லோர்க்கும் முகவரி சொல்கிறேன்,*
*என் முகவரி தெரியாமல்...!!!*

## கைம்பெண்

*கசக்கியா பிழிவது*
*இதயங்களை!*
*கண்ணீரிலா துவைப்பது*
*கைக்குட்டைகளை!*
*சோகத்திலா குளிப்பாட்டுவது*
*சொந்தங்களை!*
*இரத்தத்திலா துடைப்பது*
*இரணங்களை!*
*புத்தாடையாகவா உடுத்துவது*
*வெள்ளைச் சேலையை!*
*மஞ்சள் குங்குமத்திலா மறைப்பது*
*கைம்பெண் கோலத்தை!*
*நந்தவனத்திலா நாசமாக்குவது*
*நாகரிக வாழ்க்கையை!*
*மறுமணத்திலா மலரவைப்பது*
*கானல் பூக்களை!*

## அக்கா

*பிறக்கும் போதே சுமையாய் இருந்தேன்*
*அம்மாவிற்கு!*
*வளர்க்கும் போது சுமையாய் இருந்தேன்*
*அப்பாவிற்கு!*
*வாழ்நாள் முழுவதும் சுமையாய் இருந்தேன்*
*அக்காவிற்கு!*
*வாழ்ந்த பின்னும் சுமையாய் இருக்கிறேனே*
*என்னைப் பிடித்த அவளுக்கு மட்டும்!*

## அண்ணன்

தொலைந்து செல்லாக் கனவுகளும்…
துரத்திச் செல்லும் வாழ்க்கையும்…
இடைவிடாது வரும் இன்னல்களும்…
சொகுசாய் வரும் சோதனைகளும்…
வசந்தமாய் வரும் வறுமையும்…
விசித்திரமாய் விலகி விட்டதே
வரமில்லாமல் வந்த பொக்கிஷமாய்…
அண்ணன் வந்ததால்…

## இயற்கையைக் காப்போம்

இயற்கை வளம் மாண்டுவிடுமோ என்று
அதன் தலைமாட்டில் நின்று
விசிறிக் கொண்டிருப்பவர்களே
இதோ உங்கள் காதுகளைக் கொஞ்சம்
கடன்கொடுங்கள் - முதலில்
உங்களுக்கெல்லாம் ஓர் அதிர்ச்சிதரும் - சங்கதி.
பூமித்தாயின் இயற்கை வளங்கள்
சிறிதுசிறிதாய்ச் செத்துக் கொண்டிருக்கிறது.
ஆயிரமாயிரம் ஆண்டளவாய்
அசையாதிருந்த இயற்கை மாளிகை
நவநாகரிகமெனும் பேரில்
நாசமாகிக் கொண்டிருக்கிறது.
பரிதாபம் பூமித்தாயின்
உடலில் ஒட்டியிருப்பது
உடைந்த எலும்புகளும்
ஊசலாடும் கொஞ்சம் உயிரும்
மழை தரும் மரமும், உயிர்தரும் காற்றும்…
உயிர்க்காற்று தந்த
மரங்களை நன்றி மறந்து
வெட்டிச்சாய்க்கிறது
மனித இனம்.
மழைதரும் மரங்களையும்,
உயிர்தரும் காற்றையும்,
உணவளிக்கும் நிலத்தையும்,

தொழிற்சாலைக் கழிவுகளாலும்
நச்சுப் புகையினாலும்
நாசமாக்கியது.
நச்சுப்புகை
ஓசோன் படலத்தில் ஓட்டையிட்டதும்
நாகரிக வாழ்வால்
நச்சுப் புகையினால்
தொழிற்சாலைக் கழிவுகளால்,
பூமித்தாயின் சேலைகளான
சோலைகளை
நிர்வாணமாக்கியது போதும்.
இனியும் இந்நிலை தொடரின்
உங்களின் வாழ்க்கையே
நிர்மூலமாகி விடும்
இனியும் காலம் தாழ்த்தினால்
இயற்கைச் சீற்றங்களினால் நாமெல்லாம்
காலம் சென்றவர்கள் எனும்
பட்டியலில் தானிருப்போம்
எனவே
இனியொரு விதி செய்வோம்
பூமித்தாயின் சிகரங்களான
மரங்களை நடுவோம்
நிலமகளின் இரத்த ஓட்டமான
நீர் வளங்களைத் தூய்மையாக்குவோம்
உயிரினங்களின்
உயிர் மூச்சான காற்றை
மாசுபடுத்திகளை
மட்டுப்படுத்துவோம்
எனவே உன்,
பகுத்தறிவைப் பண்படுத்து
பண்படுத்திப் பயன்படுத்து
என் தோழமையே, இதுவெறும்
கவிதை என நினைத்து
கற்பனையில் மிதக்காதீர்
காரியத்தில் இறங்கிடுவோம்

*வருங்காலம் நமை வாழ்த்தும்*
*எதிர்காலம் நமை வணங்கும்*
*இயற்கையைக் காப்போம்.*

**வனிதா. சு**
*பி.லிட். இரண்டாமியாண்டு.*

## நட்பு

*கடவுள் உண்டென உணர்ந்தேன்*
*என் நண்பனைப் பார்த்த பிறகுதான்*
*கடவுளோ இவ்வுலகைப் படைத்தவன்*
*அவளோ என் இதயத்தில் நட்பு என்னும் உறவைப்*
*படைத்தவள் அன்பான பேச்சால்...*
*கண்ணுக்குள் இருக்கும் கருவிழிபோல*
*எனக்குள் இருக்கும் என் நினைவே நட்பு*
*வானத்தில் இருக்கும் நிலவையோ இருள் மறைக்கிறது*
*எனக்குள் இருக்கும் உன் நட்பை யாரால் மறைக்க முடியும்*
*மறக்கக் கூடியது அல்ல நம் நட்பு*
*இருவர் மனதிலும்*
*என்றும் வாழக் கூடியது*

**வெ.ஸ்ரீவித்யா**
*பி.லிட்., இரண்டாமியாண்டு*

## தமிழே! என் உயிரே!

*என்னருமைத் தாயகமே*
*எனையீன்ற தமிழகமே*
*உன்னருமை நானறிவேன்!*
*உன் பெருமை உலகறியச்*
*செய்திடுவேன்*
*பாட்டுக்கொரு புலவன் பாரதி*
*பாடியதும் உன் மொழியில்!*
*நான் எழுதும் இக்கவி மொழியும்*
*நற்றமிழ் உன் சீர் வழியில்!*

**மோ. கோபிகா**
*பி.லிட்., இரண்டாமியாண்டு*

## தன்னம்பிக்கை

*நான் தோல்வியைக் கண்டு துவலவில்லை!*
*துயரம் என்னும் கண்ணீர்க்*
*கடலில் மூழ்க வில்லை!*
*வாழ்வா தோல்வியா என்று எண்ணி எண்ணி*
*நான் வாடவில்லை!*
*முத்தமிழே என்னை ஏன் சோதிக்கிறாய் என்று*
*நித்தம் பாட்டெழுதியதில்லை!*
*வீட்டில் உன்னால் முடியாது முடியாது என்று*
*என்னைத் துரத்தியபோதும்*
*முயற்சியை நான் விடவில்லை!*
*சாலையோரம் சென்றபோது*
*ஏன் இன்னும் இருக்கிறாய் என்றனர்!*
*நாளை சாதிக்க இவையெல்லாம்*
*வெறும் பேச்சு என்று சென்றேன் !*
*நண்பர்கள் எல்லாம் என்னை நகைத்துப் பேச*
*இவைதான் என் மனதை நசுக்கி விடுமா!*
*வெற்றி என்னும் சிறப்பைக் காண்பேன்*
*தோல்வி என்னும் தோரணையைத் தூக்கி எரிவேன்!*
*எத்தனை பேர் என்னைச்*
*சுற்றி நின்று சோதித்தாலும்!*
*சோதனையைச் சோதிக்க சோர்வாகாமல் பார்ப்பவள்தான் நான்!*
*வெற்றி என்னும் வெற்றிடத்தை*
*நிரப்பத் துடிக்கும் வெறியுடையவள்தான் நான்!*
*வெற்றி என்னும் வாகைப்*
*பூவைச் சூடிக்கொண்டு வானில்*
*சிறகடிக்கத் துடிப்பவள்தான் நான்!*
*இன்று வெட்டி வெட்டி என்னை வீழ்த்தினாலும்*
*நாளை துளிர்த்து மரமாக வளர்ந்து நிற்பவள் தான் நான்!*
*தோல்வி என்னைச்*
*சுனாமியாகச் சூழ்ந்தபோதிலும்*
*நம்பிக்கை என்னும் என் கைகளால் நீந்தி வருபவள்தான் நான்!*

**வீ. புவனேஸ்வரி,**
*பி.எஸ்.சி மூன்றாம் ஆண்டு*

## இயற்கை

*நாமறியா இரவு*
*குழந்தையின் விசும்பல் சத்தமாய்*
*இலை உரசிச் செல்லும் காற்று*
*இருட்டு பயத்தில் வானம்*
*வடித்த கண்ணீர்*
*இலையின் மேல் பனித்துளி*
*தொடர்ந்து ஊர்ந்து எறும்புகளால்*
*புலர்ந்த புதிய பாதை*
*வாளியின் கைப்பிடியில்*
*வழுக்கி விழும் கம்பளிப்பூச்சி*
*ஒரேயொரு மழைத்துளியில்*
*வெள்ளமாகும் ஈசலின் உலகம்*
*எங்கோ ஒரு இடத்தில் ஏதோ ஒரு கவிதை*
*வெடித்துத் தயாராகிறது விருட்சமாக*
*மழை நின்றபின் இரைதேட*
*கிளம்பும் ஒரு பூனை*
*ஒரு தவளையின் சின்ன சப்தம்*
*அதற்கு முடிவாகிறது.*

## தமிழ்

*தாயே! தமிழே! தணியாச் சுடரே*
*நீயே எங்கள் வாழ்வே! வளமே!*
*அலையென மாற்றம் அடித்திடும் உலகில்*
*சிலையென மாறா இளமை வடிவில்*
*தலைமுறை ஆயிரம் தழைத்திடும் தமிழே!*
*கலைகளும் எழுத்தும் காத்திடும் அமிழ்தே!*

**க. விஷாலி**
*பி.எஸ்.சி முதலாமியாண்டு*

## தாயின் கருவறை

*உணர்வு இல்லாமல் இருந்தேன்*
*வார்த்தை இல்லாமல் பேசினேன்*
*காற்று இல்லாமல் சுவாசித்தேன்*
*கண்கள் இல்லாமல் இரசித்தேன்*

*கவலை இல்லாமல் இருந்தேன்*
*என் அம்மாவின் கருவறையில் மட்டும்...*

***பா. சரிதா***
*பி.சி.ஏ. மூன்றாமியாண்டு*

## நினைவுகள்

*இடம்பெயர்ந்து போனாலும் இதயம் மறக்கவில்லை*
*இளமைக்கால நம் நினைவுகளால் மனம்*
*சிறகடித்துப் பறக்கிறது வண்ணத்துப்பூச்சிகளாய்....*
*உன் பிரிவால் கணக்கும் என் இதயம் உன்*
*சுவாச நினைவுகளால் லேசாகிவிடுகிறது! நம்*
*அறைக்கண்ணாடியில் நீ ஒட்டி வைத்த பொட்டுகள்*
*மறைந்திருந்து உன் அழகை அசை போட்டு*
*என்னை ஆனந்தப்படுத்துகின்றன.*

## நட்பு

*உன்னை நேசிக்கிறேன்*
*உயிரோடு உனக்காகக் காத்திருக்கிறேன்*
*கண்களை மூடித்திறந்தால் உன்முகம் பார்க்கிறேன்*
*நீபேசவில்லை என்றால் மறைகிறேன்*
*படிப்பில் நாம் வெல்வோம்!*
*வாழ்வில் முன்னேறுவோம்!*
*நட்பை நான் ஆதரிக்கிறேன்*

## தாய்மை

*கருவில் சுமந்ததாயே உன்னைஎன்*
*கருவிழியில் காண்பேன் என்றும்*
*மடியில் சுமந்த உன்னைநான்*
*என் நெஞ்சில் சுமப்பேன் என்றும்*
*துன்பத்தைச் சுமந்து எனக்கு இன்பத்தைத் தந்த தாயே*
*உன்னை இன்பத் தேனில் மகிழ்விப்பேன் என்றும்*
*என்னைஈன்ற அன்றுநீதந்த*
*முத்தத்தின் சத்தம் என்றும் என் நினைவுகளில்*
*உன்னைப்பிரியும் சூழல் வந்தால்*
*என் ஏழு பிறவியையும்*

உன் பிறவியாய் வைத்து
என்னைஅதில் காண்பேன் தாயே...

**த. இந்துமதி**
பி.சி.ஏ. இரண்டாமியாண்டு

## படித்ததில் பிடித்தது – மூன்றெழுத்து

அம்மா மூன்றெழுத்து
அப்பா மூன்றெழுத்து
தம்பி மூன்றெழுத்து
தங்கை மூன்றெழுத்து
பாட்டி மூன்றெழுத்து
மகன் மூன்றெழுத்து
மகள் மூன்றெழுத்து
மனைவி மூன்றெழுத்து
தாத்தா மூன்றெழுத்து
பேரன் மூன்றெழுத்து
பேத்தி மூன்றெழுத்து
இவை அனைத்தும் அடங்கிய
உறவு மூன்றெழுத்து - உறவில் மேம்படும்
பாசம் மூன்றெழுத்து - பாசத்தின் விளையும்
அன்பு மூன்றெழுத்து - முயற்சியில் வரும்
வெற்றியும் மூன்றெழுத்து
தோல்வியும் மூன்றெழுத்து
தோல்வி தரும் வலியால் வரும் வேதனை மூன்றெழுத்து
காதலில் பறிபோகும் உயிர் மூன்றெழுத்து
இது கவிதை என்றால் அதுவும் மூன்றெழுத்து
இது அருமை என்றால் அதுவும் மூன்றெழுத்து
நட்பு என்ற மூன்றெழுத்து இணைந்து படித்த
அனைவருக்கும் நன்றி என்பதும் மூன்றெழுத்து
என் தலைப்பில் உள்ள மூன்று என்ற மூன்றெழுத்து
இவை அனைத்தும் அடங்கிய தமிழ் மூன்றெழுத்து
வாழ்க தமிழ்!!!!

**காமாட்சி**
பி.சி.ஏ. இரண்டாமியாண்டு

## நட்பு

*அன்பினால் வருவது நட்பு*
*ஆபத்தில் உதவுவது நட்பு*
*இன்பத்தில் வருவது நட்பு*
*ஈன்ற பொழுதிலும் தோன்றுவது நட்பு*
*உணர்வுகளைக் கொண்டு வருவது நட்பு*
*கடும் பனிப்பொழிவில் உன் நட்பை அறிந்தேன்*
*நீ என் சுவாசமாக வீசிக்கொண்டு இருப்பதனால்!*

**ஏ. தனலட்சுமி**
*பி.சி.ஏ முதலாமியாண்டு*

## அம்மாவின் அன்பு

*அன்புள்ள என் அம்மா*
*நீதான் என் இன்பம்*
*அம்மா! நீ என்னைப்*
*பத்து மாதம் சுமந்தாய் - ஆனால்*
*நான் உன்னை வாழ்க்கை*
*முழுவதும் சுமப்பேன்*
*இவ்வுலகில் பலபேர் இருந்தாலும்*
*உன்னைப் போல் யார்?*
*நான் உன்னைப் பிரிய வேண்டியதாக*
*இருந்தால் அது என் மரணம் மட்டும் தான்!!*

## அப்பாவின் அன்பு

*அப்பா என்றாலே அன்பு*
*நீ எனக்குக் கல்வி தந்தாய் - அதனால்*
*நான் உனக்கு உன் மகள் - என்ற*
*பேரின்பம் மட்டுமே தந்தேன்*
*என் இதயத்தில் நான்கு அறை*
*அதில் நீ இல்லை எனில்*
*அது கல்லறை - இவ்வுலகில்*
*நீ எனக்கு வாழ்க்கை அனுபவம்*
*கற்றுத் தந்தாய் - இது மட்டுமா*
*இன்னும் ஏராளம் ஏராளம் - அதைச்*
*சொல்ல வார்த்தைகள் இல்லை!!....*

## இயற்கையின் அழகு

*இயற்கை என்றாலே பேரின்பம்*
*ஏராளம்! ஏராளம்!! ஏராளம்!!!*
*அதில் எவ்வளவு ஏராளம்!*
*இது இந்தப் புவிக்கே பெருமை*
*இதைக் காக்க வேண்டியது நம் கடமை*
*இவ்வாழ்க்கையில் இயற்கையோடு*
*வாழவேண்டியது நம் மெய்யெழுத்து!!*

**த. மகாகவி**
*பி.சி.ஏ. முதலாமியாண்டு*

## அம்மா

*கருவறையில் இருக்கும் போது - என்னைக்*
*கண்ணால் காணாமலேயே என்மீது*
*அளவுகடந்த பாசம் வைத்தாய்*
*நான் கருவறை விட்டு வெளியே வந்ததும்*
*எனக்கு இரத்த தானம் செய்தாய் - உன்*
*உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு...*
*நீ என்மீது வைத்திருக்கும் அன்பு*
*அளவில்லாத வானத்தைப் போன்று*
*அதுபோல என் உயிர் உள்ளவரை*
*உன்னைப் பூப்போல தாங்குவேன் அம்மா!!!*

**பொ. கமலீஸ்வரி**
*பி.சி.ஏ முதலாமியாண்டு*

## அப்பா

*அப்பா நீ என்னைக் கருவில்*
*சுமக்கவில்லை அதற்குப் பதிலாக*
*என்னை உன் மனதில் சுமந்தாய்!*
*நீ எனக்கு ஒரு அப்பா மட்டும் அல்ல...!!*
*நெருங்கிய நண்பனும் கூட*
*உன் அன்பு எனக்கு பிடிக்கும் - ஏன்*
*கோபம் எனக்குப் பிடிக்கும் - ஏன்*
*உன்னையே எனக்கு மிகவும் பிடிக்கும்*

இந்த உலகத்திலேயே மிகவும் மகிழ்ச்சியான
நிலை எதுவென்றால்....!
உன் காலில் விழுந்து ஆசிர்வாதம்
பெறுவதே அப்பா!!!....

**பொ. கமலீஸ்வரி**
பி.சி.ஏ முதலாமியாண்டு

## நட்பு

உதிரத்தால் வந்த உறவாயின்
உதிர்ந்து போயிருக்கும்
சொந்தமாக இருந்திருந்தால்
சோதனை பல தந்திருக்கும்
இமைகளின் வழியே இதயம் நுழைந்து
இறுதிவரை இன்பம் அளிக்கும்
ஓர் இதமான உணர்வு நட்பு.

**ச. கோதாவரி**
பி.சி.ஏ. முதலாமியாண்டு

## அம்மா!

அம்மா...!
ஒருஅம்மாவின் கடைசி ஆசை
என்னவென்றால் தன்
கல்லறையில் மேல்
உன்பெயரை எழுதிவை
நினைப்பதற்கு அல்ல
அங்கும் உன்னை,
நான் சுமப்பதற்கு
உலகில் தேடித்தேடி அலைந்தாலும்
மீண்டும் அமரமுடியாத சிம்மாசனம்
தாயின் கருவறை
அழகான உணர்வான ஒற்றைச்சொல்
அம்மா... அம்மா...
பிறந்தவுடன் சொன்னதும்....
உயிரை வலியோடு முடிக்கும்போது சொல்வதும்
அம்மா.... அம்மா...

*உன் அன்பின் கதகதப்பும், வலிக்காத தண்டனைகளும்*
*இனியாராலும் தரமுடியாது... அம்மா....*

**கே. அகத்தியன்**
*பி.சி.ஏ. முதலாமியாண்டு*

**அம்மா...**

*சிற்பியில் இருந்துஎடுத்தமுத்துப்போல்*
*என்னைபிரகாசிக்கச் செய்தாய்*
*சூரியனில் இருந்துவரும் ஒளியைப்போல்*
*என்னை வெளிச்சத்திற்குக் கொண்டுவந்தாய்*
*பூமியில் அழகுடைய பூக்களைப் போல்*
*என்னை மென்மையாக வளர்த்தாய்*
*உன் கஷ்டத்தை எல்லாம் மறைத்து*
*என் இஷ்டத்திற்காக வாழ்ந்தாய்*
*நான் பசியில்வாடக் கூடாது என்பதற்கு*
*நீ தினமும் வெயிலில் வாடினாய்*
*அம்மா என்ற உன் உறவுக்குமுன் வேறு*
*எந்த உறவும் நிகராகாது...*
*எல்லா அன்னைகளும்*
*அனைவருக்கும் கிடைத்த ஒரு பொக்கிஷம்...*

**எஸ். யுவராணி**
*பி.சி.ஏ. முதலாமியாண்டு*

**உழவன்...**

*மண்ணிலே*
*பொன்னெடுத்து*
*மேனிக்கு*
*அணிகலன்களாக்குபவன்*
*மனிதன்!*
*மண்ணிலே*
*பொன்னி விதைத்து*
*மேனியை வளர்ப்பவன்*
*உழவன்!*
*புல் முதல் மரம் வரை*
*புழுமுதல் பறவைகள் வரை*

*பாமரன் முதல்*
*தலைமைக் குடிமகன் வரை*
*உயிரில் கலந்தவன்*
*உழவன்.....*

**எஸ். மகாலட்சுமி**
*பி.சி.ஏ. முதலாமியாண்டு*

## நட்பு

*அழகானநட்பினால்*
*ஆருயிர் நண்பனால்*
*இன்பம் களையாமல் இருக்கின்றேன்!*
*உன்னதமான உன் உறவில்*
*ஊற்றெடுக்கும் உன் அன்பினால்*
*வளர்கநம் நட்பு*
*வளர்பிறைபோல*

**கா. நந்தினி**
*பி.சி.ஏமுதாலாம் ஆண்டு*

## அம்மாவின் கவிதை

*நினைவுதெரிந்தபின்*
*தாயோடு நானிருந்ததைவிட*
*தனியாக நானிருந்ததே அதிகம்*
*உறவுகளை எப்போது பார்த்தாலும்*
*சொல்லிவிடுவாள்*
*என் மகன் எப்போது வருவானோ? என்று*
*கடல் தாண்டி வந்தேன்*
*தாயைக் கண்ணாடிப் பெட்டியில்*
*வைத்தநாள் அன்று?*

**சு. ஸ்ரீனுவாசன்**
*பி.சி.ஏ. முதலாமியாண்டு*

## கல்வி

*அனைவரும் கற்கவேண்டும் கல்வி*
*அது நம்மை உயரத்திற்குக் கொண்டுசெல்லும்*
*சிறுவயதில் சேர்ப்பார்கள் பள்ளிக்கூடம்*

*அங்குநாம் கற்போம் பாடம்*
*அதன் பிறகு மனமும் அறிவும் ஆகும் திடம்!*
*கல்வி கற்றால்தான் பல செய்திகள் தெரியும்*
*அவ்வாறு கல்லாவிடின் வாழ்க்கை*
*போராட்டமாக அமையும்*
*பாரதி சொன்னார் காலையில் படிப்பு*
*இன்றுபள்ளில் மூன்று வேளையில் படிப்பு*
*எனக்குத் தெரியாது அதுசரி அல்லது தப்பு*
*கல்வியைக் கற்றுத் தருபவர்கள் ஆசிரியர்கள்*
*அவர்கள் ஆசிரியர்கள் மட்டுமல்ல ஓர் ஆசான்கள்!*
*கல்வியைக் கற்றுத் தருபவர்கள் ஆசிரியர்கள்*
*அவர்கள் ஆசிரியர்கள் மட்டுமல்ல ஓர் ஆசான்!*
*கல்விக் கூடங்களில் ஆசிரியர் சொல்வதைக் கேளுங்கள்*
*வாழ்க்கையில் சிறந்து*
*அனைவரும் வெல்லுங்கள்*
*கல்வி கற்பதுதான் சரி*
*அது வெற்றிக்கான ஒரு வழி!*

**ச. லட்சயோகன்**
*பி.சி.ஏ. முதலாம் ஆண்டு*

## நட்பு

*நட்பு என்பது கருவிழி - நான்*
*ஒருபோதும் இமைக்கமாட்டேன்*
*ஏனென்றால் என் இமைகள்*
*உன்னை மறைத்துவிடும் என்பதற்காக!*

## அப்பா

*அப்பாஎன்பது இதயத்துடிப்பு!*
*கை,கால் இல்லாமல் வாழலாம்*
*இதயம் துடிக்கவில்லை என்றால்*
*வாழ்வில்லை*
*இதயத்தில் உள்ளவரே*
*என் அப்பா*

**டி. சுவேதா**
*பி.சி.ஏ. முதலாமியாண்டு*

## அம்மா

*உன்னைவிட்டு*
*எத்தனைஉறவுகள்*
*மதிக்காமல்*
*சென்றாலும்...! உன்*
*உணர்வுகளுக்கு*
*மதிப்பளித்து உன்*
*கண்ணீரைத் துடைப்பவள்தான்*
*"அம்மா"*

## உண்மை

*நீங்கள் சாப்பிடும்*
*உணவில் உங்கள்*
*பெயர் உள்ளதா*
*தெரியாதுஆனால்*
*நீங்கள் வீணாக்கும்*
*உணவில் அடுத்தவர்*
*பசிஉள்ளதைமறவாதீர்கள்...!*

***ப.ராஜலட்சுமி***
*பி.சி.ஏ. முதலாம் ஆண்டு*

## அம்மா

*என் முகம் பார்க்கும் முன்பே*
*என் குரல் கேட்கும் முன்பே*
*என் குணம் அறியும் முன்பே*
*என்னை அதிகமாக நேசிக்கும்*
*ஓர் இதயம் என் அம்மா*
*சிரிக்கும் போது வாழ்க்கையை*
*வாழ முடியும் ஆனால்,*
*அழும் போது மட்டுமே வாழ்க்கையைப்*
*புரிந்து கொள்ள முடியும்*
*ஒருவர் தனிமையில் வருந்தி நிற்கின்ற போதுதான்,*
*நிற்கின்ற போதுதான்,*
*தன் வாழ்க்கையைக் கற்றுத்*
*தெரிந்து கொள்ள முடியும்*

ஒருவர் தனிமையின் வலியானது
அவர் அவர் வாழ்க்கையைக்
கடந்து செல்லும் நேரங்களில்
மட்டும்தான் உணரமுடியும்

**ந. பொன்னெழில்**
பி.ஏ. ஆங்கிலம் மூன்றாமியாண்டு

## தன்னம்பிக்கை

ஒரு பறவை மரத்தின் கிளையில்
அமரும்போது
அது எந்த நேரத்திலும்
முறிந்து விடும்என்ற
பயத்தில்
அமருவதில்லை
ஏன் என்றால்
பறவை நம்புவது
அந்தக் கிளையை அல்ல
அதன் சிறகுகளை.

## வெற்றி

வெற்றி என்பது உன் நிழல் போல
நீ அதை தேடிப் போகவேண்டியதில்லை.
நீ வெளிச்சத்தை நோக்கி
நடக்கும் போது உன்னுடன் வரும்.
முடியாது என்று சொல்வது
மூடநம்பிக்கை
முடியுமா என்று கேட்பது
அவநம்பிக்கை
முடியும் என்று சொல்வதே
தன்னம்பிக்கை.

**எம். ஆர்த்தி**
பி.ஏ. ஆங்கிலம் மூன்றாமியாண்டு

## வார்த்தை

அதிகம் பேசாதவனின்
வாயிலிருந்துவரும்

வார்த்தைக்கு
எப்போதும் அதிகமான
மதிப்பு உண்டு.

### நல்ல நண்பன்

ஆயிரம் சொந்தம்
நம்மைத் தேடி வரும்
ஆனால் தேடினாலும்
கிடைக்காத
ஒரே சொந்தம் நல்ல
நண்பர்கள்

**ச.பிரியங்கா**
பி.ஏ. ஆங்கிலம் மூன்றாமியாண்டு

### நட்பு

உன் நட்புஎன்னும் சிறையில்
சிக்கிக்கொண்டேன்
தவறுகள் செய்தால் தண்டித்துவிடு
ஆனால்
விடுதலை மட்டும்செய்துவிடாதே.

### துணிச்சல்

இறப்பதற்கு ஒரு நொடி துணிச்சல்
இருந்தால் போதும்
ஆனால்
வாழ்வதற்கு ஒவ்வொரு நொடியும்
துணிச்சல் வேண்டும்

**மு.தமிழரசி**
பி.ஏ. ஆங்கிலம் மூன்றாமியாண்டு

### நட்பு

காலங்கள் தோறும் காத்திருப்பு இருக்கின்ற
காட்சிகளின் காலப்பிம்பம்
சந்திப்புகள் நிறைந்த சாயங்களின் வடிவில்
சாவறையின் சகாப்தம்

*தவிப்புகள் நிறைந்த தயக்கங்களின் நடுவில்*
*தலைசிறந்த மாயம்*
*நஞ்சு நிறைந்த உலகத்தின் விளிம்பில்*
*நானாகிய நான் நிற்கின்றேன்*
*பாசங்கள் நிறைந்த படிப்பறையின் உள்ளத்தில்*
*பாடங்களின் ஆழம்*
*வலிகள் நிறைந்த வாழ்க்கையில் நடிப்பில்*
*வாழும் காலம் தோறும் வாழ ஆசைப்படுகிறேன்*

***ர.முகேஷ்வரி***
*பி.ஏ.ஆங்கிலம் இரண்டாமியாண்டு*

## நட்பின் வலி

*பல தண்டனைகளிலும் ஏமாற்றங்களிலும்,*
*சிக்கித் தவித்து*
*மீண்டு வர முடியாமல்*
*மீண்ட நாள்*
*உன் நட்பு என்னும் வலையை*
*விரித்து ஏமாற்றினாய்*
*ஏனோ அதிலிருந்து மீண்டு*
*வர முடியாமல் இன்னும்*
*தவித்துக்கொண்டு இருக்கிறேன்*
*என் நண்பன் நீதான்*
*என்று கூறிய உன் வார்த்தையின்*
*நடிப்பில் விழுந்தேன்.*
*உன் நடிப்பில் விழுந்த*
*காரணமோ என்று தெரியவில்லை*
*என்னால் இன்னும் எழ முடியவில்லை*
*ஆழமானது உன் வார்த்தை இல்லை*
*என் நட்பே.*
*மீள முடியாமல்*
*தூண்டிலில் அகப்பட்ட மீன் போல*
*தவிக்கிறேன் என் நெஞ்சோடு*
*நட்பினைப் போன்றொரு*
*அற்புத உறவை*
*நானிலம் தேடினும் வாய்க்குமோ?*

காலத்தினால் வந்த வலிகளைத்
தாங்க முடிந்த என்னால்
உன்னால் ஏற்பட்ட
காயத்தினைத் தாங்க முடியவில்லை
நீ இழந்தது என் நட்பை அல்ல
நட்பு என்னும் நல்லுறவை.

**மு.அகிலா**
பி.ஏ.ஆங்கிலம் இரண்டாமியாண்டு

## நட்பு

ஒரு நொடியும் ஒரு பொழுதும்
உன் நினைவுகளை ஒளித்ததில்லை...
ஒரு யுகமோ பல யுகமோ
உறவை முறித்து தவித்ததில்லை...
இது யாரோட கண்ணுப்பட்டு
பிரிந்தது நம்ம வழி!...
இந்த விதியோட விளையாட்டில்
கிடைத்தது புதிய வழி!...
நடிப்பு என்பது
திறமையை வெளிப்படுத்துவதற்கே!
அன்றி
பிறரின் உணர்வுகளில் விளையாடி
ஏமாற்றுவதற்கல்ல!...
உணர்வுகளுக்கு மதிப்பளித்து
நட்பை நிலைநாட்டுவோம்!

**சு. திவ்யா**
பி. ஏ. ஆங்கிலம் இரண்டாமியாண்டு

# சிறுகதைகள்

## கடமையும் பொறுப்பும்

ஒரு நாட்டில் ஒரு ராஜா தன் நாட்டு மக்களுடன் அனைத்து பகுதிகளையும் வென்று வாழ்ந்து வந்தார். இவருக்கு மூன்று மகன்கள் மகிழ்ச்சியாக தன்னுடைய மகன்களுக்கு அனைத்து கலைகளையும் கற்றுக்கொடுத்தார். திடீரென்று ஒரு நாள் ராஜா மனக் கவலையுடன் இருந்தார். அந்த கவலைக்குக் காரணம் தனக்குப் பின்பு தன் நாட்டையும் நாட்டு மக்களையும் பார்த்துக் கொள்ள தன் மூன்று மகன்களில் யாருக்கு அரச பதவியைக் கொடுப்பது என்று புரியாமல் இருந்தார். ஒரு நாள் ராஜா கவலையுடன் காட்டிற்குச் சென்றார். அங்கு ஒரு மரத்தின் நிழலில் ஒருவர் தியானம் செய்து கொண்டு இருந்தார். கவலையில் இருந்த ராஜாவைப் பார்த்த குரு உன்னுடைய கவலைக்குக் காரணம் என்ன என்று கேட்டார்.

ராஜா தன்னுடைய கவலையின் காரணத்தைக் கூறினார். அதற்கு குருவானவர் கூறினார் நீ கவலைப்படாதே என்று ஒரு நல்ல ஆலோசனை கூறினார். குரு கூறிய ஆலோசனைப்படி ராஜா செயல்பட்டார். உடனே ராஜா அரண்மனைக்கு விரைந்து வந்தார். தன்னுடைய மூன்று மகனையும் அழைத்துப் பேசத் தொடங்கினார். உங்கள் மூவருள் யார் எனக்குப் பிறகு இந்த நாட்டை ஆளும் தகுதி உடையவர் என்று ஆராய நான் ஒரு தகுதிப் போட்டி வைப்பதாகக் கூறினார். நீங்கள் மூவரும் ஒரு மாதம் காட்டிற்குச் சென்று இருக்க வேண்டும். ஒரு மாதம் கழித்து என்னை வந்து நீங்கள் பார்க்க வேண்டும். நல்ல செய்தியைக் கொண்டு வருபவரே நாட்டை ஆளும் தகுதி படைத்தவர் என்றார்.

மூவரும் சென்றனர். அதில் முதல் மகன் காட்டில் உள்ள கொடிய விலங்கை அழித்தான் அந்தப் பொருளையும் இரண்டாம் மகன் காட்டில் உள்ள நல்ல விலைமிக்க தானியப் பொருளையும் கொண்டு வந்தான். மூன்றாம் மகன் அவனைப் போன்ற பல வீரர்களை உருவாக்கினான்.

தன் நாட்டுக்குச் சதி செய்யும் எதிரியை வீழ்த்தி வெற்றி பெற்றான். ஒரு மாதம் கழித்து மூன்று மகனும் ராஜாவைப் பார்த்தார்கள். ராஜா அவர்கள் கொண்டு வந்த பொருளையும்

செய்தியையும் கேட்டு மூன்றாம் மகனையே ராஜாவாக நியமித்தார். மூன்றாம் மகன் காட்டில் இருந்தாலும் தன் நாட்டையும் மக்களையும் காப்பாற்றினான். எங்கு இருந்தாலும் தன்னுடைய கடமையையும் பொறுப்பையும் உணர்ந்தால் வாழ்க்கையில் வெற்றி பெறலாம்.

**கி. அரித்தா**
பி.லிட் மூன்றாமியாண்டு.

## கல்லூரி நாட்கள்

கல்லூரியின் முதல் நாள் அனைவரும் புதியவர்களாக இருந்ததால் என்னோடு பழக நண்பர்கள் இல்லை எனப் பல நாட்கள்நான் அழுது வீட்டில் புலம்பினேன். இப்படியே நாட்கள் செல்லச்செல்ல கொஞ்சகொஞ்சமாக எல்லோரும் பேசத் தொடங்கினார்கள். வகுப்பில் அனைவரும் எனக்கு நண்பர்கள் என்றாலும் என் மனதோடு நெருங்கியவர்கள் ஐந்து தோழிகள். இவர்களுடன் கல்லூரி நாட்கள் மிக இன்பமாக நகர்ந்தன. முதல் அனுபவமாகப் பருவத் தேர்வு தொடங்கியது. சரியான முறையில் படித்துத் தேர்வு எழுதி தோழிகள் அனைவரும் வெற்றி கண்டோம். எங்களின் ஒற்றுமையான உறவின் மேல் பல பேருக்குப் பொறாமை கூட ஏற்பட்டது. நட்பில் அவ்வளவு உறுதுணையாக நின்று இறுதி வரை நட்பு என்ற ஒன்று போதும் எனக்கூறிக் கொண்டோம்.

ஆசியர்கள்கூட எங்கள் நட்பினைப் பலசமயத்தில் உதாரணமாகக் காட்டியது உண்டு. சிற்சில ஊடல் எங்களுக்குள் ஏற்பட்ட போதிலும் உடனே மன்னிப்பு கேட்டுச் சேர்ந்து கொள்வோம். எப்பொழுதுமே மகிழ்ச்சியாக இருந்தாலும் படிக்க வேண்டிய நேரத்தில் காரியத்தில் கண்ணாய் செயல்படுவோம். எங்களுக்குள் கேலி கிண்டல் செய்து கொண்டு நாள்தோறும் மகிழ்ச்சியை மட்டுமே கொண்டாடினோம். இரண்டு ஆண்டுகள் வகுப்பில் ஒன்றாக அமர்ந்து விட்டு மூன்றாம் ஆண்டு தொடக்கத்திலேயே சிறிய கசப்பான சூழ்நிலை ஏற்பட்டது. அதுதான் வகுப்பில் ஏற்பட்ட இடமாற்றம். வகுப்பில் பிரிந்து அமர்ந்தாலும் மனதால் நெருங்கியே இருந்தோம். ஆனாலும் எங்களைப் பிரிக்க நினைத்தது காலம்.

அதுதான் எங்கள் கல்லூரி வாழ்க்கையின் இறுதி நாள். அன்று வண்ண உடைகளில் வண்ணத்துப்பூச்சி போல் காலைத் தொடக்கமே மிகவும் ஆரவாரமாகத் துவங்கியது. கல்லூரி வாழ்வின் நிறைவான நாள் என்பதால் மாணவர்கள் அனைவரையும் நினைவுகூறும் வகையில் மேடையில் இவ்வளவு நாட்கள் பேசாதவர்களுக்குக் கூட பேசும் வாய்ப்பு கிடைத்தது, அவரவர் தங்களுடைய கருத்தைத் தெரிவித்து மகிழ்ந்தோம் காலத்திற்கும் திருப்பிப் பார்க்கும் விதமாக அனைவரோடும் புகைப்படங்கள் எடுத்து மகிழ்ச்சியாய்க் கொண்டாடினோம். பின்பு கோவிலுக்குச் சென்று முருகனின் முழுமையான அருளைப் பெற்று வணங்கினோம். இறுதியாக நண்பர்களைப் பிரியும் வருத்தத்தோடு கண்ணீர் மழையில் நனைந்து கொண்டே வீடு திரும்பினோம். அந்த நாள் நினைவுகள் வாழ்நாள் முழுவதும் நெஞ்சை விட்டு நீங்காத நினைவுகளாகவே பதியும்.

**அனிஷா. ச**
பி.லிட் மூன்றாமியாண்டு.

## நன்மை செய் நாளை மேன்மை வரும்

ஒரு அழகிய பசுமை வாய்ந்த பச்சைதாவணியை ஆடையாய் உடுத்திக்கொண்டு பழங்கள் என்னும் அணிகலன்களை அணிந்து கொண்டு பூக்கள் என்னும் பூவினைச் சூடிக்கொண்டு ஒருபுறம் மரங்களும், துள்ளித் துள்ளி ஓடி விளையாடும் தன் தாயாகிய கடலின் சேரும் நீரும், நீந்தி விளையாடி மகிழும் இடமாகிய நீர்வீழ்ச்சிகளும், பறவைகளின் கூச்சலும், விலங்குகளின் ஆனந்த ஆர்ப்பாட்டங்களும், காற்றின் ஓசைகளும் நிறைந்த சுற்றுச்சூழல் அமைந்த ஓர் காட்டில் தனித்துவம் மிக்க ஒரே ஒரு ஆப்பிள் மரம் ஒன்று இருந்தது அந்த ஆப்பிள் மரத்தடியின் கீழ் நான் அமர்ந்து கொண்டு இனி என் வாழ்க்கையில் முன்னேறுவதற்கான அடுத்த வழி என்ன என்று சிந்தித்துக்கொண்டிருந்தேன்.

மரத்தில் இருந்து ஒரு ஆப்பிள் என் அருகே விழுந்தது, மதிய உணவுக்கு வெளியே செல்ல வேண்டிய அவசியமில்லை என்று எண்ணி அந்த ஆப்பிளைக் கடித்துக்கொண்டே சிந்திக்கத் தொடங்கினேன். திடீரென! ஒரு தொழிட்நுட்பம் வாய்ந்த ஒரு சாதனம் என்னை நோக்கி வந்தது. நான் இவை என்னவாக

இருக்கும் என்றும் அருகில் பதற்றத்துடன் அருகில் சென்றேன். அதன் மீது பவர்பேபி என்ற வார்த்தை பொறிக்கப்பட்டிருந்தது.

அதனுடைய பயன் என்னவாக இருக்கும் என்றும் தெரிய வில்லை, இலை எங்கிருந்து வந்திருக்கும் என ஒரே குழப்பம்? அந்தச் சாதனத்தில் ஒரு பொத்தான் இருந்தது, அதனை அழுத்தினேன். அந்தச் சாதனம் இயங்கத் தொடங்கியது. அந்த சாதனம் காலை உணவுக்கு 100 கோடி பிளாஸ்டிக் காகிதங்களை உண்ணுகிறது, மதிய உணவிற்கு ஒரு லட்சத்து ஐந்தாயிரத்து முப்பத்தி இரண்டு கோடி பிளாஸ்டிக் காகிதங்களை உண்ணுகிறது, இரவு உணவு கணக்கற்றவை. தாகத்திற்கு எண்பதுகோடி லிட்டர் சாக்கடை நீரை அருந்துகிறது.

இதைக் கண்ட நான் ஆச்சரியத்தில் மூழ்கி மீண்டும் ஆப்பிளைக் கடித்தேன். அந்த ஆப்பிளைச் சுற்றிப் பார்த்த போது அந்த ஆப்பிளின் மறுபுறத்தில் இருந்து ஒரு புழு என் கைமேல் வந்து அமர்ந்து என்னிடம் கூறியது இந்த உலகைத் தூய்மை செய்வதற்கும் சுற்றுச்சூழலை நன்கு மேம்படுத்துவதற்கும், இனி இந்த உலகில் மனிதனைப் படைப்பது தவறான ஒன்று என எண்ணிப் படைக்கும் கடவுளான பிரம்மா இந்தச் சாதனத்தை இந்த உலகில் அனுப்பி, இதை உண்மை மனம் கொண்ட உன்னிடம் கொடுக்கச் சொன்னார் என்று கூறி சென்றுவிட்டது.

உடனே அந்தச் சாதனத்தை உலகிற்கு அறிமுகப்படுத்தி குறைந்த விலைக்கு வியாபாரம் செய்து உலகின் கோடீஸ்வரி பட்டியலில் முதலிடம் பெற்றேன். எனவே நல்ல எண்ணங்களும், சிந்தனைகளும் நம் மனதில் இருந்தால் இன்று ஏழையாக இருந்தால் கூட நாளை திடீரென செல்வந்தராக மலரமுடியும்.

"நன்மை செய் நாளை மேன்மை வரும்"

தோல்வி என்னைச் சுனாமியாக சூழ்ந்தபோதிலும் நம்பிக்கை என்னும் என் கைகளால் நீந்தி வருபவள்தான் நான்! தோல்வி என்னும் கிணற்றுத் தண்ணீரான நான் வெற்றி என்னும் கடல் தண்ணீரில் கலக்கத் துடிப்பவள்தான் நான்!

**வீ. புவனேஸ்வரி,**
பி.எஸ்.சி மூன்றாம் ஆண்டு.

## மறைந்து வரும் மனிதநேயம்

மருத்துவக் கல்லூரிப் பேருந்து ஒன்றில் மாணவர்களும் ஆசிரியர்களும் பணி முடித்து வீடு திரும்பிக் கொண்டிருக்கின்றனர். அப்போது வழியில் விபத்து ஒன்றில் சிக்கித் தலையில் அடிபட்டு இடுப்பு முறிந்து இரத்த வெள்ளத்தில் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கின்றார் ஒருவர். ஆனால் அவ்வழியில் செல்லும் மக்களோ அதைக் கண்டும் காணாமல், வாகனங்களில் ஒதுங்கிச் சென்று கொண்டிருக்கின்றனர். மற்றவர்கள் போலவே, அந்தப் பேருந்தில் இருந்து மருத்துவ ஆசிரியர்களும், உயிருக்குப் போராடும் அந்த மனிதரைக் கடந்து செல்கின்றனர். மாணவர்களில் சிலர் மட்டும் இரக்கப்பட்டு, அவசர சிகிச்சை என்னை அழைத்து, விபத்து நிகழ்வைச் சொல்லி, அவசர ஊர்திக்கு ஏற்பாடு செய்கின்றனர். இது கற்பனை அல்ல. ஓர் உண்மை நிகழ்வு. இறுகிப்போன இதயங்களுக்கிடையே, உயிரைக் காக்க பல ஆண்டுகள் கடினமாகப் பயின்று எந்நிலையிலும் கடமையை ஆற்றுவேன் என்று உறுதிமொழி எடுத்தால் அனைவர்களிடமும் அன்பு செலுத்தி உயிர்களைக் காப்பாற்றலாம்.

இந்த அவசர உலகில் நாம் குறுகிய நோக்குடன் அன்பைக் கூட அளவிட்டுத்தான், அதுவும் தெரிந்தவர்கள் என்றால்தான் காட்டுகிறோம். அன்பு என்பது எல்லா உயிரினங்களுக்கும் பொதுவானது. நாம் மட்டும்தான் அந்த அன்பைப் பல நிலைகளாகக் காட்டுகிறோம். கிராமமே குடும்பம் போல் வாழ்ந்தது போய், நம் அண்டைவீட்டார் கூட அடையாளம் தெரியாது அந்நியர் ஆகிவிட்ட இந்தக்காலத்தில் மனிதநேயம் மறைந்துதான் வருகிறது.

"மனிதநேயம் கொள்வோம் உயிர்கள் மீது!-நல்
மனிதராக வாழ்வோம் மண்மீது"

**அ. சிவரஞ்சனி,**
பி.எஸ்.சி மூன்றாம் ஆண்டு.

## ஏக்கம் – ஊக்கம் : தூக்கம் – துக்கம்

நீ எதையாவது சாதிக்க வேண்டும் என்ற ஏக்கம்தேவை. ஓர் அக்னிக்குஞ்சு போன்று உன் நெஞ்சில் என்றும் கனன்று கொண்டு இருக்கட்டும். அந்த ஏக்கம் உன்னை எப்போதும்

ஊக்கம் உடையவனாக வைத்திருக்கும். ஏக்கமும் ஊக்கமும் இல்லாதவனுக்குத் தூக்கமும் துக்கமும் வருவது இயல்பாகி விடுகிறது. ஊக்கம் வராமல் இருப்பதற்குக் கவனச்சிதறல்தான் காரணம். மாணவர்களின் கவனத்தைப் பெரிதும் சிதறடிப்பது செல்போன், சினிமா, டி.வி. போன்றவைதான். ஒரு விஞ்ஞானி கூறும் ஆராய்ச்சியைப் பார்ப்போம்.

ஒரு இளம் விஞ்ஞானி தமது ஆராய்ச்சிக்காக ஒரு குட்டிமான், ஒரு இளஞ்சிங்கம், ஒரு குரங்குக்குட்டி ஆகியவற்றை தனித்தனியே கூண்டில் அடைத்தார். காட்டின் நடுவில் மூன்று கூண்டுகளையும் வைத்தார். அவற்றுக்கு வேண்டிய உணவுகளை எல்லாம் வேளாவேளைக்கு வைத்து நல்ல திடமாக மூன்றையும் வளர்த்தார்.

தம்மைப் போன்ற மிருகங்கள் எப்படியெல்லாம் விளையாடுகின்றன, சண்டையிடுகின்றன, மரத்துக்கு மரம் தாவுகின்றன. எப்படிப் சப்தமிடுகின்றன போன்ற அனைத்தையும் அந்த மூன்றால் பார்க்க முடிந்தது. ஆனால் கூண்டுக்குள் இருந்த அவை மூன்றும் அசையலாமே தவிர ஓட முடியாது. அவை வெறும் பார்வையாளர்கள் மட்டுமே. எப்படியென்றால், நம் மாணவர்கள் தொலைக்காட்சி முன் அமர்ந்து நடிகர்கள் நடனம் ஆடுவதையும், விளையாட்டு வீரர்கள் வெற்றி அடைவதையும் பார்ப்பார்களே, அதுபோல, ஓராண்டு கழிந்தது. மூன்று விலங்குகளையும் கூண்டுகளி லிருந்து திறந்துவிட்டார். ஆனால் மூன்றும் என்ன செய்வதென்று தெரியாமல் முழித்தன. ஆம், அவை தங்கள் இயல்பான குணங்களை இழந்திருந்தன. ஆம், குதித்து ஆட்டம் போடும் குரங்கு பருத்த உருவத்துடன் சோம்பலாக அமர்ந்திருந்தது. துள்ளித் திரிய வேண்டிய மான் தூங்கி வழிந்தது. சிங்கம், நரியைப் பார்த்தே பயப்பட்டது என்றால், மொத்தத்தில், அந்த மூன்றும் பயந்தாங்கொள்ளியாகச் சக்தியற்ற சீவன்களாக நடமாடின. இந்த அவல நிலைமை நம் இளைஞர்களுக்கும் ஏற்பட்டுவிடக் கூடாது. அதனால், மாணவர்கள் படிப்பிலிருந்து அவர்கள் கவனத்தைச் சிதறடிக்கும் செல்போனிலிருந்து அவர்கள் விலகி இருக்க வேண்டும்.

**தேவிபாலா**
பி. ஏ. ஆங்கிலம் மூன்றாமியாண்டு

# கட்டுரைகள்

## பசி

### முன்னுரை

உலகில் வாழ்கின்ற அனைத்து உயிர்களுக்கும் உணவு என்பது மிகவும் இன்றியமையாதது என்றாலும் அந்த உணவினை மற்றவர்களுக்குக் கொடுத்து உண்ண வேண்டும் என்னும் அறச்சிந்தனையை உணர்த்துவதாக இக்கட்டுரை அமைகிறது.

### உணவில்லாமைக்கான காரணம்

நம் பாரத நாட்டில் ஏராளமான வளங்கள் இருந்தன. மகான்களும் மன்னர்களும் ஆன்றோர்களும் சான்றோர்களும் வாழ்ந்த புண்ணிய பூமி. ஆனால் இப்பூமியில் உணவில்லாமல் இருக்கும் நிலை நீடிக்கிறது என்றால் நாம் வெட்கப்பட வேண்டும். காரணம், தனக்கென்று மட்டும் வாழ்தல் என்ற மனப்பான்மை நீடிப்பதே இதற்கான அடிப்படைக் காரணம் ஆகும்.

### சமுதாயச் சூழல்

உலகில் பரவலாக உணவில்லாக் குறைபாடு இருந்து கொண்டே இருக்கிறது. ஒவ்வொரு நாளும் உணவு இல்லாமல் எத்தனையோ நபர்கள் இருக்கின்ற நிலையைப் பார்த்தும் தம்மால் உதவ முடியவில்லையே என்ற ஏக்கங்களோடு செல்லுபவர்களும் உண்டு. சிலர் சமூகச் சூழலைக் கண்டு குமுறுகிறார்கள். ஆனால் எவ்விதச் செயலும் அவர்களால் செய்ய இயலுவதில்லை.

சமூகம் என்பது தன்னோடு சேர்ந்து ஒன்றாக வாழும் வாழ்க்கை எனலாம். அதில் வாழும் அனைவரும் தன்னோடு உடன்பிறவா சகோதரர் என்று ஒவ்வொரு தனி நபரும் நினைத்து வாழ்ந்தால் நம் நாட்டில் உணவு மட்டுமல்லாது எந்த ஒரு பிரச்சனையும் ஏற்படாது.

### பசிக் கொடுமை

பசியின் கொடுமையை எந்த ஒரு மனிதனும் அறிந்திடக் கூடாது என்பதைப் பாரதியார் உணர்த்தியுள்ளார். ஒருவனது வாழ்க்கையில் பசியே மிகவும் கொடுமையானது என்பதை

ஔவையாரும் கொடிது கொடிது இளமையில் வறுமை கொடிது என்று பசி வருத்தத்தைப் பாடியுள்ளார். சமூகத்தில் இந்நிலை மாற வேண்டும் என்று வருங்கால இளைய தலைமுறையினர் பாடுபட வேண்டும்.

தனியொருவனுக்கு உணவில்லையெனில் செகத்தினை அழித்திடுவோம்.

வள்ளல் பெருமான் பசிப்பிணியைப் போக்க அவர் மூட்டிய அடுப்பு இன்று வரையிலும் எரிந்து கொண்டிருக்கிறது.வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்.

பயிர்கள் வாடியதைத் தாங்க முடியாமல் தானும் வாடினார். அது போல மக்களும் அனைத்து உயிர்களையும் சமமாகக் பாவித்துப் பழகுகின்ற மனப்பக்குவத்தைப் பெற வேண்டும்.

ஒரு வேலை சாப்பாட்டிற்குக் கூட வழி இல்லாமல் எத்தனையோ மனிதர்கள் இறந்து போவதையும் நாம் பார்க்கிறோம். இந்நிலை மாற திருமூலர் அன்றே, யாவர்க்குமாம் இறைவர்க்கு ஒரு பச்சிலை என்ற பாடலில் கூறியுள்ளார்.

## பசிப்பிணி போக்கும் வழி

பசிப் பிணியைப் போக்க ஒவ்வொரு தனிமனிதனும் தன்னால் இயன்ற உணவினை மற்றவர்களுக்குத் தர்மமாகக் கொடுத்தல் வேண்டும்.

> வயிற்றுக்குச் சோறிடல் வேண்டும்
> இங்கு வாழும் மனிதருக்கெல்லாம்,

என்பார் பாரதி.

## முடிவுரை

தொண்டு செய்ய நாம் எப்பொழுதுமே தயாராக இருக்க வேண்டும், இந்தத் தொண்டி னாலேதான் இறைவனுடைய அருளைப் பெறமுடியும்.

> எண்ணிய முடிதல் வேண்டும்
> நல்லதையே எண்ணல் வேண்டும்
> திண்ணிய நெஞ்சம் வேண்டும்
> தெளிந்த நல் அறிவு வேண்டும்.

*நாம் பிரார்த்தனை பண்ண வேண்டியது என்னவென்று தெரியுமா? பண்ணிய பாவமெல்லாம் பரிதிமுன் பனியே போல நண்ணிய நின்முன் இங்கு நசித்திடல் வேண்டும் அன்னாய் என்று மகாகவி பாரதி பராசக்தியை வேண்டினார். நாம் இப்பொழுது இங்கு நடமாடும் தெய்வமாக இருக்கக்கூடிய நம்முடைய குருமகா சந்நிதானங்களை வேண்டுகிறோம். நண்ணிய நின்முன்இங்கு நசித்திடல் வேண்டும் அன்னாய் என்று அவருடைய திருவடிக் கமலங்களை மீண்டும் ஒரு முறை நம்முடைய மூன்று கரணங்களினாலும் வணங்கி,*

*எல்லோரும் இன்புற்று வாழவேண்டும்*
*எல்லோருக்கும் எல்லாமும் கிடைத்து ஏகாந்தமான*

*அந்த இறைவனுடைய பரிபூரண நிலையைப் பெறவேண்டு மென்று சுவாமிகளின் பொன்னார் திருவடிகளைத் துணையாகக் கொண்டு முருகப் பெருமானை வேண்டிக்கொள்கிறேன்.*

**நா. இலக்கியா**
*பி. லிட். மூன்றாமியாண்டு*

## சுப்பிரமணிய பாரதி

### முன்னுரை.

*பாரதியார் நாட்டின் மீதும் மொழியின் மீதும் கொண்ட பற்று பலவாகும். இவர் சாதியைச்சாடியவர் ஆவார். பாரதியார் பல வாசகங்களைக் கூறி உள்ளார். இவரைப் பற்றிக் காண்போம்.*

### பிறப்பு

*பாரதியார் 1882-1921 வரை இயற்பெயர் சுப்பிரமணிய பாரதி. பெற்றோர் சின்னசாமி-இலக்குமி அம்மை ஊர் எட்டயபுரம் வடமொழி இந்தி போன்ற மொழியை நன்கு கற்றார்.*

### நாட்டுப்பற்று.

*எமக்குத் தொழில் கவிதை நாட்டிற் குழைத்தல் என்றார். எனவேதான், இவர் தேசியக் கவியாகவும் தமிழ்க் கவியாகவும் விளங்கினார். பாட்டின் மூலம் இந்த வையகத்தைப் பாலித்திட வைத்தவர்.*

*செந்தமிழ் நாடெனும் போதினிலே-இன்பத்*
*தேன்வந்து பாயுது காதினிலே - எங்கள்*
*தந்தையர் நாடென்ற பேச்சினிலே - ஒரு*
*சக்தி பிறக்குது மூச்சினிலே*

*என ஏனையோர் எல்லாம் தாய்நாடு எனக் கூற இவர் மட்டும் தந்தையர் நாடு எனக்கூறி நாட்டு உணர்வைக் கூட்டுகிறார்.*

## மொழிப்பற்று

*யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம். சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே என்று தமிழ் அமுதின் சுவைகண்டார். நாடும் மொழியும் ஒரு நாணயத்தின் இருபக்கங்கள் போல ,*

*ஆசைக்கடலின் அமுதமடா, அற்புதத்தின் தேசமடா.*

*என்று இவர் சாதியைச் சாடி சமஉரிமையைச் சாற்றுகின்றார்.*

*தனி ஒருவனுக்கு உணவில்லை எனில்,*
*ஜெகத்தினை அழித்திடுவோம்*

*என முழங்கியவர்.*

*ஏழை யென்றும் அடிமை யென்றும்*
*எவருமில்லை ஜாதியில்*
*இழிவு கொண்ட மனித ரென்பார்*
*இந்தியாவில் இல்லையே.*

*எனப் பிள்ளை உள்ளத்தில் வீரம் விதைக்கிறார்.-*

*பாப்பா பாட்டு இயற்றிப் பிஞ்சு நெஞ்சிலே நாட்டுப் பற்றையும் நல்ல பழக்கங்களையும் விதைக்கின்றார். 'தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற எங்கள் தாயென்று கும்பிடடி பாப்பா'.*

*பாதகம் செய்பவரைக் கண்டால் - நாம்*
*பயங்கொள்ள லாகாது பாப்பா*
*மோதி மிதித்துவிடு பாப்பா - அவர்*
*முகத்தில் உமிழ்ந்து விடு பாப்பா.*

*எனப் பிள்ளை உள்ளத்தில் பெருவீரத்தை இவர் உருவாக்குகிறார்.*

### பாரதியின் முப்பெரும் மணி

*கற்பனைக் கவிதை குயிற்பாட்டு அற்புதக் காவியம் கண்ணன் பாட்டு பாஞ்சாலி சபதம் என முப்பெரும் மணியை இவர் இயற்றி உள்ளார்.*

*காதல் காதல் காதல்*
*காதல் போயிற்*
*சாதல் சாதல் சாதல்*

*கட்டுண்டோம் பொறுத்திருப்போம் காலம் மாறும் தருமத்தின் வாழ்வுதனைச் சூது கவ்வும் தருமம் மறுபடி வெல்லும் போன்றவை ஏற்றத்தக்கன.*

### பாரதியின் வாசகம்

*ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே நம்மில் ஒற்றுமை நீங்கிடில் அனைவர்க்கும் தாழ்வே, உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே. ஒன்று பரம்பொருள் நாமதன் மக்கள், பகைவனுக்கு அருள்வாய் நன்னெஞ்சே, பள்ளித் தலமனைத்தும் கோயில் செய்குவோம், எல்லாரும் ஓர்குலம், எல்லாரும் ஓர் இனம் எல்லாரும் இந்நாட்டு மன்னர் எனப் பல வாசகங்களால் மக்கள் மனத்தில் இடம் பிடித்தவர்.*

### பாரதியின் புகழ்

*பாட்டுக்கொரு புலவன் பாரதியடா எனக் கவிமணியும் இவ்வளவு சிறந்த கவிஞர் தமிழுலகில் சில நூற்று ஆண்டுகளாகத் தோன்றியது இல்லை என வையாபுரிப்பிள்ளையும் கூறினார். அழகின் தூய - வாய்மையான வடிவத்தைப் பாரதி கவிதையிலே காண இயலும்.*

### இறப்பு

*காளிதாசன் எனும் புனைபெயர்களில் கவிதை கட்டுரைகள் எழுதிவந்தார். இந்தியா எனும் ஏடு நடத்தித் தேசியம் பேசி வந்தார். ஆங்கில அரசு சிறையிட முயன்ற காலை புதுச்சேரி சென்று வாழ்ந்து வந்தார். அரவிந்தர் துணை கிடைத்தது.*

*விடுதலைக்கேற்ற வழியில் வீறுடன் உழைத்தார். பின் சிறை சென்றார். பின்னர் விடுதலை அமைந்து திருவல்லிக்கேணியில் வாழ்ந்தார் 39 ஆம் அகவையில் உயிர் (ஆவி) துறந்து அமரகவியானார்.*

**முடிவுரை**

*பாரதி பரம்பரை என்றொரு புதுக்கவிஞர் இனத்தையே படைத்திட்ட பெருமை பாரதிக்கு உண்டு. பழைய மரபுகளை எல்லாம் தகர்த்தெறிந்து விட்டு சிந்து போன்ற புதிய யாப்பிலே பொது மக்களுக்குப் புரியக் கூடிய முறையில் மக்களைப் பற்றி மக்களுக்காகவே பாட்டெழுதிய மக்கள் கவிஞன் பாரதி என்றால் மிகையாகாது. தமிழ் மெல்லச் சாகும் என்ற கூற்றை இன்றைய இளைஞர்களே அது சாகாது இனி நம் உயிராக இருந்து உயிரிலே கலக்கும் என நிரூபிக்க வருவீர்களா?*

**வ. இளவரசி**
பி.லிட். இரண்டாமியாண்டு

**சுனாமி**

**முன்னுரை**

*முன்னொரு காலத்தில் இந்திய மக்கள் கேட்டிராத பெயர் சுனாமி. 2004 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இந்தியா மட்டுமின்றி உலகம் முழுவதும் செய்தித் தாள்களிலும் தொலைக் காட்சிகளிலும் திரும்பத் திரும்பக் கூறப்பட்டது. சுனாமி என்ற வார்த்தையை மட்டுமல்ல அது குறித்த நடவடிக்கைப் பற்றிய விழிப்புணர்வையும் உலகம் பெற்றது. சுனாமி என்பது ஜப்பானிய வார்த்தையை, பேரழிவை உண்டாக்கும் ராட்சத இடர் அலைகளை ஜப்பான் மொழியில் சுனாமி என்றழைப்பர். அந்த ஜப்பானிய வார்த்தையை உலகம் முழுவதும் அன்று தெரிந்து கொண்டது.*

**நிகழ்ந்த பேரழிவு**

*2004 - ஆம் ஆண்டு டிசம்பர் 26ஆம் தேதியில் சுனாமி என்ற இயற்கைச் சீற்றத்தால் ஆயிரக்கணக்கான மக்கள் மாண்டனர். கோடிக்கணக்கான மதிப்புடைய பொருட்களும் சேதமடைந்தன.*

கிழக்கிந்திய தீவான சுமத்ராவில் மிகக்கோரமான பாதிப்பை ஏற்படுத்திய சுனாமிஅலைகள் தமிழகத்தின் நாகப்பட்டினம், காரைக்கால், கன்னியாகுமரி, குளச்சல் கேரளாவின் சில பகுதிகளிலும் பெரும் நாசத்தை ஏற்படுத்தின.

கடல் அலைகள் பெரும் சீற்றம் கொண்டு தரைப்பகுதிக்கு வந்ததாலேயே இந்தப் பேரழிவு ஏற்பட்டது. கோரத் தாண்டவம் இடும் இவ்வகை ராட்சத அலைகளை 'சுனாமி' என்று அழைப்பார்கள் என்று ஜப்பான் தெரிவித்தது. சுமார் 100 ஆண்டுகளுக்குப் பிறகே இத்தகைய சுனாமி தாக்குதல் நடந்துள்ளதாகவும் அறியப்பட்டது.

**சுனாமியின் காரணங்கள்**

கடலுக்குள் நிலநடுக்கம் ஏற்படும்போது கடலுக்குள் இருக்கும் நிலத்தில் சில இடங்களில் மேடாகவும், சில இடங்களில் தாழ்ந்து போகும். இந்தத் திடீர் மாற்றத்தால் கடல் நீர் மட்டம் சில இடங்களில் உயர்ந்தும் சில இடங்களில் தாழ்ந்தும் போகும்.

கடல் நீர் மட்டம் உயரும்போது அந்தப்பகுதிகளில் ராட்சத அலைகள் வீசும். அவ்வாறு வீசிய ராட்சத அலைகள் கடலை ஒட்டிய நிலப்பரப்பிற்குள் புகுந்து பேரிழப்பை உண்டாக்கும். அதுபோல கடலுக்குள் நிலம் தாழ்ந்து போகும் இடங்களில். கடல் நீர்மட்டம் அமிழ்ந்து போகும் அந்த இடங்களில் கடல் நீரானது நிலப்பரப்பை விட்டு உள்வாங்கிப் போகும்.

மிக முக்கியக் காரணம் இயற்கை வளங்களான மரங்களை, காடுகளை அழித்ததே.

இயற்கை வளங்களை நீ அழித்தால்
ஒருநாள் அது உன்னை அழிக்கும்

**பாதிப்பு**

உலகெங்கும் சுனாமி தாக்கியதால் ஏறக்குறைய ஒரு லட்சம் மனிதர்கள் இறந்து போனார்கள். அதுபோல பல விளைநிலங்களிலும் கடல் நீர் புகுந்ததால் கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள பயிர்கள் விலங்கினங்கள் நாசமாயின.

**நடவடிக்கை**

இயற்கையின் சீற்றங்களான நிலநடுக்கம், மழை, இடி போன்றவற்றை , முன்கூட்டியே அறியும் சாதனங்களைப் போல் சுனாமிப் பேரலைகளை அறியும் சாதனங்கள் கண்டுபிடிக்கப்பட வேண்டும் . அவை கடற்கரைப் பகுதிகளில் அமைக்கப்பட வேண்டும்.

கடற்கரையோரங்களில் வாழ்பவர்க்கு பேரலைகள் தாக்காத வண்ணம் குடியிருப்புகளை வழங்க வேண்டும் என்பன போன்ற நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது.

**முடிவுரை**

இயற்கையின் சீற்றத்தைக் கட்டுப்படுத்த முடியாது எனினும் மக்கள் தங்களால் இயன்ற அளவு பாதுகாப்பு ஏற்பாட்டைச் செய்தாக வேண்டும்.

ஆழ்குழாய் கிணறுகள் தோண்டுதல், மரங்களை வெட்டுதல், நிலத்தினுள் இருக்கும் சமநிலையைக் குலைத்தல் போன்ற மனிதனால் உருவாக்கப்படும் சேதங்களையும் நிறுத்த வேண்டும் அவ்வாறு செய்யின் இயற்கையின் சீற்றங்களிலிந்து நம்மைக் காப்பாற்றிக் கொள்ள முடியும்.

**ஆர்த்தி. வெ**
பி.லிட். இரண்டாமியாண்டு.

## குடும்பம்

**முன்னுரை.-**

குடும்பம் என்பது இரத்த உறவாலோ அல்லது திருமணம் போன்ற வேறு சட்டபூர்வமான முறைகளிலோ தொடர்பு பட்ட ஒரு உறைவிடக் குழுவாகும்.

பல சமுதாயங்களில், குடும்பம் என்பது மேற்குறிப் பிட்டவை தவிர்த்த வேறு கருத்துகளினாலும் புரிந்து கொள்ளப்பட்டிருப்பதால் குடும்பம் என்பது மனிதக் குழுவினரை உள்ளடக்கிய ஒரு உருவகமாகவும் பயன்படுவதைக் காணலாம்.

## குடும்பம் என்றால் என்ன?

குடும்பம் என்பது சமூகத்தின் இயல்பானதும், அடிப்படையானதுமான குழுஅலகாகும் என்பதுடன், அது சமூகத்தாலும், தேசத்தாலும் பாதுகாக்கப்படுவதற்கு தகுதி பெற்றுள்ளது. நெருங்கிய குடும்பம் என்பது வாழ்க்கைத் துணைவர், பெற்றோர், உடன் பிறந்தோர், மகன்கள், மகள்கள் ஆகியோரை உள்ளடக்கும். இவர்களோடு, பெற்றோரின் உடன் பிறப்புகள் ஒன்றுவிட்ட உடன்பிறந்தோர், மருமக்கள் போன்றோரும் சேர்ந்து விரிந்து குடும்பத்தின் உறுப்பினர்கள் ஆகின்றனர்.

## குடும்ப வரையறை

மனித சமுதாயத்தின் அடிப்படை அலகு குடும்பம் ஆகும். குடும்ப அமைப்பு ஒழுங்கான முறையில் அமைந்தால் அது நல்ல குடும்பம் ஆகும். குடும்பம் எனும் சொல் குழு- குழும்பு- குடும்பு - குடும்பம் என்றவாறு பெறப்படுகிறது. இது பெற்றோரும் பிள்ளைகளும் சேர்ந்த கூட்டம் என்ற பொருள் தருகிறது.

## குடும்பத்தின் வகைகள்

கணவன், மனைவி தொடர்பு, பெற்றோர்-பிள்ளைகள் தொடர்பு, உடன் பிறந்தோருக்கிடையிலான தொடர்பு போன்ற அம்சங்களில் அநேகமாக எல்லாவகைக் குடும்பங்களும் ஒத்த இயல்புகளை வெளிப்படுத்தினாலும் வேறு பல அடிப்படையில் பல்வேறு பிரிவுகளாக அமைகின்றன. குடும்பங்களை அவற்றின் அமைப்பைக் கொண்டு,

தனிக் குடும்பம்
விரிந்த குடும்பம்

என வகைப்படுத்தலாம்.

## முடிவுரை

குடும்பம் என்பது ஒருவருக்கு தனது இன்ப துன்பங்களைப் பகிர்ந்து கொள்ள உரிமையான நபர்களைத் தருகிறது. குடும்பத்தின் நபர்கள் அனைவரும் ஒருவரை ஒருவர் புரிந்து

கொண்டு இன்பமான சூழலை உருவாக்கினால் அனைவரும் மகிழலாம். குடும்பம் என்பது சரியான வழியில் நடைமுறைப் படுத்தப்பட்டால் முதியோர் இல்லங்கள், குழந்தைகள் காப்பகங்கள் அனாதை இல்லங்கள் எதுவும் வளர்ந்து இருக்காது.

சிந்தியுங்கள்! செயல்படுத்துங்கள்!! நல்பயனை அடைவீர்!!!

**சாதனா. ஏ**
பி.லிட். இரண்டாமியாண்டு.

## நட்பு ஆராய்தல்

உலகில் நாம் வாழும் வாழ்க்கை நடைமுறைகளுக்கு ஏற்பப் பல்வேறு உறவுகளை நாம் ஏற்படுத்திக் கொள்கிறோம். தாய், தந்தை, சகோதர உறவு என்பது இயல்பாகவே நம் விருப்பம் இன்றியே அமைவன. வாழ்க்கைத் துணை, நட்பு ஆகியன நம் விருப்பப்படி தேர்ந்தெடுப்பன. இவை இரண்டையும் ஒருவன் தேர்ந்தெடுக்கும் விதத்தைக் கொண்டே அவரவர் வாழ்க்கை சிறப்பானதாகவும் இழிவுக்குரியதாகவும் அமைந்து விடுகிறது. இவ்விரண்டு உறவுகளில் நட்பின் மேன்மை குறித்தும் சிறப்பு குறித்தும் அவையோருக்கும் மற்றையோருக்கும் தெரிவிப்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

"செயற்கரிய யாவுள நட்பின் அதுபோல்
வினைக்கரிய யாவுள காப்பு" (குறள்:781)

என்பது ஐயன் திருவள்ளுவர் வாய்மொழி. இவ்வுலகில் நாம் ஏற்படுத்திக் கொள்ளக் கூடிய அரிய, சிறப்பான உறவே நட்புதான் என்பதே இதன் பொருள். தம் ஈரடி வாமனக் குறளால் அந்த விண்ணையும் இந்த மண்ணையும் அளந்த திருவள்ளுவரே நட்பின் முக்கியத்துவம் அறிந்து அது குறித்துப் பத்துக் குறள்கள் அடங்கிய ஒரு அதிகாரத்தையே படைத்துள்ளார் எனின் நட்பின் சிறப்பு குறித்து நான் கூற என்ன உள்ளது?

நட்பு என்பதே 'நற்+பூ' என்பதன் வடிவம் ஆகும். அதாவது, நல்ல பூவின் மணத்தைப் போன்று நல்ல நட்பும் பிறரால் நுகரக் கூடியதாக விளங்க வேண்டும்.

பெற்றோரிடம் கூடப் பகிர முடியாத பல விஷயங்களை எவ்விதச் சலனமும் இன்றிப் பகிர்ந்துகொள்ளும் பாங்கு நட்பில்

மட்டுமே உண்டு என்பதில் இருந்து மனித வாழ்வில் நட்பின் இன்றியமையாமையை நாம் அறிந்து கொள்ளலாம். வீட்டில் பெற்றோரிடம் கொள்ளும் நட்பு, பள்ளியில் மாணவப் பருவத்தில் கொள்ளும் நட்பு, உலக வாழ்க்கையில் ஈடுபடும் போது சமூகத்திடம் கொள்ளும் நட்பு என ஒருவன் வாழ்க்கையில் எல்லா நிலைகளிலும் நட்பு என்பது நீக்க முடியா இடம்பெற்றுள்ளது. எனவே இத்தகைய சிறப்புக்குரிய நட்பினை நாம் எவ்வாறு ஏற்படுத்திக் கொள்வது? இதற்குத் திருவள்ளுவர் நமக்குத் துணை செய்கிறார். நட்பின் மேன்மையைக் குறிக்க மட்டுமின்றி நட்பை எவ்வாறு தேர்ந்தெடுப்பது என்பது பற்றி ‘நட்பாராய்தல்’ எனும் அதிகாரத்தையும், அந்த நட்பினை எவ்வாறு பேணிக் காப்பது என்பது பற்றிப் ‘பழமை’ எனும் அதிகாரத்தையும், யாருடைய நட்பைக் கைவிட வேண்டும் என்பது குறித்துத் ‘தீ நட்பு’, ‘கூடா நட்பு’ என்ற அதிகாரங்களையும் படைத்து நமக்கு வழிகாட்டியாக விளங்குகிறார் திருவள்ளுவர்.

சரி. சிறந்த நட்பினை நாம் எவ்வாறு அறிவது? எந்தச் சூழ்நிலையிலும் நண்பனைத் தளராமல் தாங்குவதே உண்மை யான நட்பு என்று அதற்கு விடை கூறுகிறார் வள்ளுவர்.

உலகில் எல்லா உறவுகளும் ஏதேனும் ஒன்றை எதிர்பார்த்தே தோன்றுகின்றன. ஆனால், எதையும் எதிர்பார்க்காமல் அமைவது நட்பு ஒன்றேயாகும். நட்புக்கும் பிற உறவுகளுக்கும் உள்ள வேறுபாடு குறித்து ஒரு புதுக் கவிஞன் கூறுவதைக் கேளுங்கள்.

> “முதலில் தோன்றி இடையில் மறைவது - உறவு
> இடையில் தோன்றி இறுதிவரை வருவது - நட்பு
> சுமக்கக் கூலி கேட்பது - உறவு
> சுமக்கவும் செய்து கூலியும் கொடுப்பது - நட்பு”

நட்பிற்கும் உறவுக்கும் உள்ள நுட்பமான வேறுபாட்டை இக்கவிதை உள்ளங்கை நெல்லிக்கனி போல் தெற்றென விளக்குகிறது.

சிறந்த நட்பானது, உண்மையான நட்பானது எதையும் எதிர்பார்க்காதது சாதி, மதம், இனம் கடந்தது பதவி, கௌரவம், அதிகாரம் அறியாதது. ஏழை-பணக்காரன் ஏற்றத்தாழ்வை

உடைப்பது. சமூகத்தில் ஒரு புரட்சியையே ஏற்படுத்தக்கூடிய ஆற்றல் பெற்ற நட்பை விளக்க வார்த்தைகளும் வேண்டுமோ?

இத்தகைய சிறந்த நட்புக்காக பகவான் கிருஷ்ணர் ஒரு சாதாரண ஏழைப் பிராமணனான குசேலருக்கும், இராமபிரான் வேடர் குலத்தில் பிறந்த குகனுக்கும் அடிமையானார்கள் எனும்போது நட்பின் உயர்வுக்கு மேலும் சான்று வேண்டுமோ?

நல்ல நட்பு இரத்த உறவுகளையே உதறிவிட்டு வரச்செய்துவிடும் என்பதற்கு நம் இதிகாசங்களே சாட்சியாக விளங்குகின்றன. மகாபாரத யுத்தத்திலே எதிரணியிலே தனது தம்பியரும் உற்றார் உறவினரும் உள்ளதை அறிந்தபோதும் துரியோதனனுடன் கொண்ட நட்பு காரணமாக, செஞ்சோற்றுக் கடன் தீர்க்க உறவுகளை எதிர்த்து நின்று தன் இன்னுயிரையே நீத்தான் கொடைவள்ளல் எனப் போற்றப்படும் கர்ணன். இது ஒரு வகை நட்பு.

அரிதிற் கிடைத்த நெல்லிக் கனியைக் கொண்டு தம் வாழ்நாளைப் பெருக்கிக்கொள்ள எண்ணாது, தன் நண்பரான அவ்வையாருக்கு அதனைக் கொடுத்து மகிழ்ச்சி கொண்ட அதியமானுடைய நட்பு ஒரு வகை.

தன் நண்பர் பாரி எதிரிகளால் வீழ்த்தப்பட்டபோது, தந்தையின் இடத்தில் இருந்து பாரியின் மக்களுக்குத் திருமணம் செய்துவைத்து உரிய கடமைகளை முடித்த பின்பு தன் நண்பர் போன இடத்திற்கே தானும் சென்ற கபிலருடைய நட்பு ஒரு வகை.

இன்னும் ஒருபடி மேலே சென்று தன் ஆயுளில் ஒருமுறையேனும் சந்திக்காத, ஒருவரால் ஒருவர் எந்தப் பலனையும் அனுபவிக்காத நட்பு பூண்ட இருவருடைய நட்பினை வரலாறு பதிவு செய்துள்ளது. கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்து உயிர் துறக்கிறான். தாம் உயிர் விடும்போது தம் நண்பர்தம்மோடு உயிர் துறக்க வருவார் என்றும் தம் அருகில் அவருக்காக ஓர் இடம் ஒதுக்குமாறும் கூறிவிட்டு இறக்கிறான். அதைப் பொய்யாக்காமல் பிசிராந்தையார் என்னும் புலவர் வந்து சேர்ந்து தன் நண்பனுடன் உயிர் விடுகிறார் எனில் வள்ளுவரின்,

*"புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்*
*நட்பாம் கிழமை தரும்"* *(குறள்:785)*

*எனும் குறளுக்கு இவர்களன்றோ உதாரணம்! அவ்வையார்,*

*"அற்ற குளத்தின் அறுநீர்ப் பறவைபோல்*
*உற்றுழித் தீர்வார் உறவல்லர் - அக்குளத்தில்*
*கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போல*
*ஒட்டி உறுவார் உறவு"* *(மூதுரை:17)*

*என்று கூறுவது இத்தகைய நட்பைப் பார்த்தன்றோ! இன்றைய இளம் தலைமுறையினர் இத்தகைய மேன்மைக்கும் சிறப்புக்கும் உரிய நட்பினாலேயே பல்வேறு இன்னல்களுக்கும் சீரழிவுகளுக்கும் உள்ளாகிறார்கள் எனில் அது நட்பின் தவறன்று. நட்பு என்னும் பெயரால் மேற்கொள்ளக்கூடிய சில தவறான தொடர்புகளே காரணம் ஆகும்.*

*எனவே குழந்தைகள் உடுத்தும் உடையிலும் உணவிலும் படிப்பிலும் கவலை கொள்ளும் பெற்றோர் இவை அனைத்திலும் அவசியமான நட்பு வட்டாரம் குறித்து அதிகம் கவனம் செலுத்த வேண்டும். சிறந்த நட்பினைத் தன் குழந்தைகளுக்கு ஏற்படுத்திக் கொடுக்கவும் அதற்கான சூழலை உருவாக்கிக் கொடுக்கவும் பெற்றோரும் ஆசிரியர்களும் கடமைப்பட்டவர்கள் ஆவர்.*

*தன் பிள்ளைகளுக்குப் பொருள் சேர்த்து வைக்கும் தந்தையை விட ஒரு தொழிலைக் கற்றுத் தந்த தந்தையே தன் பிள்ளைகளுக்கு எதிர்காலப் பாதுகாப்பைத் தேடித் தந்தவன் ஆவான் எனும் ஒரு பொன்மொழி உண்டு. அதனோடு நல்ல நட்பையும் சேர்த்துக் கொள்வது முற்றிலும் சரியானதாக அமையும்.*

*எனவே, இத்தகைய சிறப்புக்குரிய நட்பினை நாடி நாம் எல்லோரும் திருவள்ளுவர் வழிநின்று வாழ்வில் வளம் பெற எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.*

**வீ.ஜெயந்தி,**
*பி.லிட். முதலாமியாண்டு,*

## இன்றைய அறிவியல் வளர்ச்சி

**முன்னுரை:**

*அறிவியல் வளர்ச்சியில் உலகம் அதிக அறிவு பெற்றுப்பயனடைகின்றது. இப்போது அனைத்துத் துறைகளிலும் அனைத்து தொழிற்நுட்பங்கள் வந்துவிட்டன. இதனால் மனிதரின் கடினமான வேலையும் சுலபமாகிவிட்டது. இன்றைய நிலையில் ஒவ்வொன்றிலும் அறிவியல் வளர்ச்சியில் செயல் நிறைந்துள்ளது.*

**வளர்ச்சியின் சாதனங்கள்:**

*ஒவ்வொரு பொருள் உருவாவதற்கும் சாதனங்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. கணக்கிடுவதற்காகக் கணக்கிடும் கருவி, திரைப்படம் எடுக்க கேமரா, வீட்டு உபயோக சாதனங்கள் தொலைபேசி, கணினி என்று அறிவியலின் வளர்ச்சி பெருகியுள்ளது.*

**கணினி வளர்ச்சி:**

*அறிவியல் வளர்ச்சியில் மிக முக்கியமான ஒன்று கணினி. இவை கி.பி. 1833-இல் இங்கிலாந்து நாட்டைச் சார்ந்த சார்லஸ் பாபேஜ் என்ற அறிவியல் அறிஞர் கணினியின் உருவமைப்பை வடிவமைத்தார். இவரின் அமைப்பை வைத்துக்கொண்டு கணினி போன்ற மடிக்கணினி அளவிற்குக் கணினி வளர்ச்சி யடைந்துள்ளது. மேலும் தொழிற்சாலை, அலுவலகங்கள் போன்ற அனைத்து வேலைகளுக்கும் கணினியின் வளர்ச்சியின் பயன்பாடு இன்றியமையாதது.*

**கணினியின் பயன்பாடு:**

*பல மில்லியன் கணக்குகளைச் சரிபார்க்கும் அளவிற்கு கணினியின் பயன்பாடு உள்ளது. இவற்றை நாழிகை, நிமிடம், வருடம் போன்ற அனைத்தையும் சேமிக்கின்றன. சினிமாவில் குழந்தை ஆறு மாதம் தொடங்கியதும் இறக்கும் வரை கற்றுக் கொள்கின்றன. பள்ளிகளிலும், கல்லூரிகளிலும், மருத்துவ மனைகளிலும், அலுவலகங்களிலும், சிறு சிறு நிறுவனம், கடைகளிலும் கணினியின் பயன்பாடு வந்துவிட்டது. அனைத்து*

விதமாகச் சமுதாயத்திற்கு முக்காலத்தின் செய்திகளையும் அரிந்துகொள்வதற்கு இந்தக் கணினி பல வகைகளில் பயன்படுகிறது.

### தொலைபேசி வளர்ச்சி:

தொலைபேசியை நாம் உள்ளங்களில் வைத்திருக்கின்ற அளவிற்கு எளிதாக உள்ளது. பிராண்டன்பெக்கர் என்பவர் இதனைக் கண்டறிந்தார். இதனைப் பயன்படுத்தி நிழற்படம், மின்னஞ்சல் அனுப்பவும், நேரில் உரையாடவும், இணையம் மூலம் தேர்வு எழுதவும், நண்பர்களுடன் உரையாடவும் தொலைபேசியை பயன்படுத்திக் கல்வி கற்கும் நிலை வந்துவிட்டது. இவ்வாறு தொலைபேசியின் பங்கும் இன்றியமை யாததாக அறிவியல் வளர்ச்சியில் உள்ளது.

### மருத்துவத்தில் அறிவியல்:

மனிதர்கள் பல்வேறு நோய்க்கு ஆளாகின்றனர். அப்போது மருத்துவமனைக்குச் சென்று மருத்துவரின் ஆலோசனையால் சிகிச்சை பெறுகின்றபோது நோயின் நிலையைக் கண்டறிய கருவிகள் மூலம் ஆய்வு செய்து ஈசிஜி, ஓ - கதிர், தெலஸ்கோப், இரத்தப் பரிசோதனை கருவி, இதயம் சரிசெய்யும் கருவி, போன்று மருத்துவமனையில் பல்வேறு வகையான கருவிகளால் நோயாளரின் நோய் குணமாகின்றன. மருத்துவமனையில் ஒவ்வொன்றும் கருவிகளாகவே உள்ளன.


### முடிவுரை:

இவ்வாறு அறிவியல் வளர்ச்சியைப் பயன்படுத்தி கற்கும் கல்வியே வேலைவாய்ப்பு என்று உணர்ந்து அனைவரும் அறிவியல் வளர்ச்சியை ஊக்கப்படுத்தி இந்த நூற்றாண்டில் இந்தியாவை முதன்மை பெறச் செய்வோமாக!

**நிஷாந்தி ம**
பி.சி.ஏ. முதலாமியாண்டு.

# ஓவியங்கள்


தமிழ்க் கடவுள் முருகன்.
ர. காயத்ரி


ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ், கலை அறிவியல் கல்லூரி,
K. கருணா தேவி



திருகார்த்திகை தீபம்
தா. கிருணாதேவி
B.Lit Year.


அம்புலிப்
பருவம்




வை. சிவசங்கரி

பி.லிட் மூன்றாமாண்டு



கி. அரித்தா
பி.லிட் மூன்றாமாண்டு


மு. கௌசல்யா
பி.லிட் மூன்றாமியாண்டு.


# தொல்காப்பியர்




ஜெ. விஜி
பி.லிட் மூன்றாமாண்டு




இவ. ஷிஜி
பி.லிட் மூன்றாமயாண்டு




ஸ்ரீ சக்தி வடிவேலவன்
சாதனா
(பி.லிட்) தமிழ்
இரண்டாமாண்டு



தமிழ்க்கடவுளின்
தந்தை சிவ பெருமான்
- இரா. சக்தீஸ்வரி.
பி.லிட் - இரண்டாமாண்டு.
இந்த படைப்பு என் சொந்த முயற்சியில் உருவானது.


பாரதியார்
விக்னேஷ்வரா
பரதநாட்டியம்
வ. இளவரசி
பிலிட் 2ம் ஆண்டு
செய்யாமல் செய்த
திருவள்ளுவர்


வ. இளவரசி
B.Lit II year
இயற்கையே
மனிதனின் முதல்
உயிர்.

# ஸ்ரீ கண்ணன்




விநாயகர்
ஜ. அனிதா
பி.லிட் - இரண்டாமாண்டு (தமிழ்)





வனிதா . சு
பி.லிட் , இரண்டாமியாண்டு

ஸ்ரீ கிருஷ்ணா



ச. கோகிலா

பி.லிட் II.YEAR



அ. நித்யா
பி.லிட்., முதலாமியாண்டு.


N. Manikandan
B.Com III year.


A. Sivagami
B. com II year


A. Sivagami
B. Com II year


Art by...
K. Dharani
B.COM - II year





N. Ananthi
B.Com 1st year




V.Manju
B.com
I year

கண்ணாடி தான்

என் சிறந்த நண்பர்

ஏனெனில்

நான் அழும் போது

அது ஒருபோதும்

சிரித்ததில்லை

- சார்லி சாப்ளின்



By

B. Saritha

BCA III - Year


முருகன்
ர. நர்மதா
BCA - I year

பகத் சிங்



N. Ponezhil
B.A. English III year



இரா. நிவேதா
பி.ஏ., ஆங்கிலம்
மூன்றாம்யாண்டு


சோலையின் மௌனம் (ஓவியம்)
இரா. லாவண்யா
பி.ஏ., ஆங்கிலம்
மூன்றாமாண்டு


எப்பொழுதும் துணை



இரா. லாவண்யா
பி.ஏ. ஆங்கிலம்
மூன்றாமியாண்டு


தாயின் அரவணைப்பு
Arts by.
S. Sujitha
BA. English
II-Year


R. Kumaresan
B.A. English
(I. Years)


by:
K. Pachaiyammal
BA English - I year